குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 38 ] காளயுக்தி ஆண்டு மாசித்திங்கள் 10—3—79 [ இதழ் 4

திருக்கயிலாயபரம்பரைத்


தருமையாதீனம்

ஸ்ரீ ஆனந்தபரவசர்

பூங்காவில்

எழுந்தருளியிருக்கும்

வனதுர்க்காதேவி



தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

உள்ளமுனை அல்லாலொன்
றுள்ளவில்லை நின்றெளிக்கும்
கள்ளமற நீயும்
கருதவில்லை — எள்ளளவும்
நற்றவமோ செய்யவில்லை
நாயேன் உனையடைதற்
கற்றதென்ன சொக்கநா தா.

— சொக்கநாத வெண்பா-50


ஆசிரியர் :-

வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
**சி. அருணவடிவேல் முதலியார்**



உ

குருபாதம்

# " ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 38 | 10-3-79 | இதழ் 4


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | "40" ஐ "25" ஆக்கும் கொடுமை! | 145 |
| 2 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை... | 150 |
| 3 | அரசாணையால் ஆலயங்களின் பூஜைகளை மறந்துவிடவேண்டியதுதான் | 155 |
| 4 | " சிறுநிலச்சுவான்கள் வர்க்கமே அழிந்துவிடும் " | 158 |
| 5 | 25 : 75 விகிதம் நிலச்சுவான்களுக்கு மட்டுந்தானா ? | 159 |
| 6 | திருவிடைமருதூர்த் தலச் சிறப்புக்கள் | 161 |
| 7 | திருமந்திரமும், சிவஞானசித்தியாரும் | 171 |
| 8 | அறம் கூறும் அரிய நூல்கள் | 177 |
| 9 | ஒரு கடமை காமத்தை வெல்கிறது! | 180 |
| 10 | செய்திகள் | 185 |
| 11 | எதிர்காலம் | 188 |
| 12 | பார்வையாளர் குறிப்பு | 179, 187 |

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 38 | காளயுக்தி - மாசி - 10—3—79 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

**பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை**
**பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!**
**கொன்றையம் முடியிணுய்! கூடலால வாயிலாய்!**
**நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.** —சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

# "40" ஐ "25" ஆக்கும் கொடுமை!

**ஏன் இந்தத் தலைப்பு?**

தமிழின் பெருமை; சைவத்தின் அருமை; சிவபரம்பொருளின் கருணைபோன்ற அரிய செய்திகளையே, ஞானசம்பந்தம் கடந்த முப்பது ஆண்டுகட்கு மேலாகத் தலையங்கங்களில் விரித்துரைத்துவந்தது. திருக்கோயில், திருமடங்கள் போன்ற சமயநலங்காக்கும் விருட்சங்களின் வேர்களையே வெந்நீர் ஊற்றிப் பட்டுப்போகச்செய்யும் - ஆட்சியாளர்களின் அடுத்தடுத்த நடவடிக்கைகளால் 'ஞானசம்பந்தம்' போன்ற தெய்வீக இதழ்கள் சில முரண்பாடுகளுக்கு எதிராகவும் குரல் கொடுக்கவேண்டியுள்ளது. அண்மையில் தமிழ்நாடு அரசின் சார்பில் அறிவிக்கப்பெற்ற நிலவுடைமை வாரம்பற்றிய அறிவிப்பு அறநிலையங்களுக்கும் விரிக்கப்பெறுமானுல், தொன்மையும், பாரம்பரியமும் மிக்க தமிழர்களின் சமய உணர்விற்கு இழைக்கப்படும் கொடுமை என்பதை மக்கள்முன் வைக்கவேண்டிய கடமையும் பொறுப்பும் ஞானசம்பந்தத்திற்கு ஏற்பட்டன. மேற்கண்ட தலைப்பு 'ஞானசம்பந்தம்' வழங்கியது அல்ல. 18—2—1979 ஞாயிற்றுக்கிழமை

வெளிவந்த மதுரை தினமணி நாளிதழில் அதன் ஆசிரியர் திரு. ஏ. என். சிவராமன் அவர்கள் எழுதிய தலையங்கத்திற்குக் கொடுத்திருந்த தலைப்பு இது.

**அநியாயம் : கொடுமை :**

தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள், நிலவருவாயை நம்பி நடைபெற்றுவருவன இந்நிலங்கள் ஆங்காங்குள்ள குடிமக்களிடம் மிகக் குறைந்த குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. உரிய குத்தகைகளை அவர்கள் அளப்பதில்லை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக அடுத்தடுத்து ஆட்சிக்குவந்த அரசுகள், அரசியல் ஆதாயம் கருதிக் குடிமக்களின் இச்செய்கைக்குப் பலவகையிலும் ஊக்கம் கொடுத்து வந்துள்ளன. இச்செயல்களால் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் எல்லாம் இருந்தும் ஏதுமில்லாத நிலையில் நித்திய வழிபாட்டுக்கே வழியின்றித் தேய்கின்றன என்பனபோன்ற செய்திகளை இதுவரை பலமுறை தமிழ்நாட்டு மக்களுக்கு 'ஞானசம்பந்தம்' விரித்துரைத்துள்ளது. உரிய குத்தகை அளப்பதற்குக்கூட விளைய வில்லை என்று குடியானவர்கள் கூறியபோது 'வாரம்' என்றபங்கீட்டு முறை அரசால் கொண்டுவரப்பட்டது. விளைவில் நிலவுடைமையாளருக்கு 65 பங்கும், குடியானவருக்கு 35 பங்கும் என்று கொண்டு வரப்பட்ட திட்டம் கொஞ்சங்கொஞ்சமாகத்தேய்ந்து திரு. காமராஜர் ஆட்சிக் காலத்தில் நிலவுடைமையாளருக்கு 40 பங்கும், உழுது பயிரிடுவோருக்கு 60 பங்கும் என மாற்றி அமைக்கப்பட்டது. 15 ஆண்டுகளாக நீடித்துவந்த இந்த வாரமுறை தற்போது மேலும் மாற்றப்படப்போவதாகத் தெரிகிறது. விளைவில் உடைமையாளர்பங்கு 25 என்றும், குடியானவர்பங்கு 75 என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாற்றத்தையே 'கொடுமை' என்று குறிக்கின்றோம். தினமணி இதனை,

> "இது ஒரு 'அநியாயம்' என்பதுமட்டுமல்ல; பலர்மீது
> கொடுமை புரிவதுமாகும்"

எனச் சாடியுள்ளது.

**உண்மைநிலை என்ன**

உதாரணமாக, ஒருகோயிலுக்குச் சொந்தமான நிலம் ஒரு ஏக்கர் (மூன்றுமா) ஒரு குடியானவரிடம் குத்தகைக்கு விடப்பட்டிருப்பதாகக் கொள்வோம். களத்துமேட்டில் அடித்து அளந்ததில் 24 கலம் நெல் கண்டுமுதலாகியுள்ளது என்றால் இதில் புதிய அறிவிப்பின்படி 18 கலம் உழுது பயிரிட்டவனுக்கு என்றும், நில உரிமையுடைய கோயிலுக்கு 6 கலம் என்றும் பிரித்துக் கொள்ளப்படவேண்டும். இந்தஆறு

கலமும் தராசுமூலம் நிறுவையில் சுமார் 3 மூட்டையாகவே இருக்கும். ஒருமூட்டை நெல்விலை தற்போதுள்ள நிலையில் 45 ரூபாய் என்றால், 3 மூட்டைக்கும் கிடைக்கும் தொகை ரூபாய் 135 ஆகிறது. இதில் நிலத்தை உடைமையாக உடைய கோயில் மேற்கண்ட ஒரு ஏக்கருக்கும் நிலவரி, நிலவரிசர்சார்ஜ், தண்ணீர் தீர்வை போன்ற இனங்களுக்காக அரசுக்குச் செலுத்தவேண்டிய தொகை ரூபாய் 85 ஆகிறது. இதுபோக கோயிலுக்குப் புதிய அறிவிப்பின்படி ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து கிடைக்கும் நிகர வருவாய் ரூபாய் 50 தான். இன்று உள்ள நிலையில் ஒரு ஏக்கர் நிலத்தின் குறைந்தவிலை மதிப்பு சுமார் 6000 ரூபாய். இந்நிலத்தினை விற்று, வங்கியில் நிலையானமுதலீடாகச் செய்தால் ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு ரூ. 540/- வட்டியாகக் கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

### சொன்னதும் செய்ததும் :

இதில் இன்னும் வேடிக்கையான செய்திகள் பல உள்ளன. மிகக் குறைவான இந்நிலவருவாயும் உரியவாறு ஆலயங்களுக்கு வந்து சேர்கிறதா என்றால் அதுவும் இல்லை. தீவிர சாகுபடி திட்டங்களாலும் புதிய உரவகைகளாலும் அபரிமிதமான விளைச்சல் இருந்தாலும் அரசு, இந்தக் குறைந்த வாரத்தைக்கூட அறநிலையங்கள் பெறமுடியாது அவ்வப்போது சட்டங்களை நீட்டித்துக்கொண்டே போகின்றது. கழுதை தேய்ந்து கட்டெறும்பாகப்போன கதையாக ஆலயவருவாய்கள் மிகவும் குறைந்து நித்திய வழிபாடுகள் நின்றுபோகும் நிலைமை உருவாகிவிடுமோ என்று அறநிலையங்களும், பக்திமிக்க பெரியோர்களும் அஞ்சுகின்றனர். ஒருபக்கத்தில் முதல் அமைச்சரும், அறநிலைய அமைச்சரும் நம்பிக்கையூட்டும் அறிவிப்புக்களைச் செய்துகொண்டே, இன்னொருபக்கத்தில் அதற்கு நேர்மாறான அறிவிப்பினை வெளியிட்டு வருவது பெரும் அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது.

### லாபம் யாருக்கு ?

அரசின் 25—75 அறிவிப்பின் உள்நோக்கம் வேறாக இருக்கலாம் என்று பத்திரிகைகள் பல எழுதுகின்றன. அரசோ உழுது பயிரிடுவோரின் நலன்குறித்தே இம்மாற்றத்தினைக் கொண்டுவருவதாக அறிவித்துள்ளது. அது உண்மை என்றாலும், இச் சட்டத்தின் உண்மையான பலனை ஏழைவிவசாயி ஒருபோதும் அடைவதில்லை. கிராமப் புறங்களில் வாழும் வசதிபடைத்தவர்கள் அறநிலைய நிலங்களைக் குத்தகைக்கு எடுத்திருக்கும் சிறு விவசாயிகளின் நிலங்களைப் பெரும் அளவில் உள் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, அரசின் சட்டங்களைச் சாதகமாகக்கொண்டு, பெரியலாபத்தை அடைகின்றனர்.

அரசு ஏமாற்றம் அடைகிறது. ஆலயங்களும் சுரண்டப்படுகின்றன. இடைத்தரகர்கள் பெரும்லாபம் ஈட்டுகின்றனர். தமிழ்நாடு அரசு இதன் உண்மையினை அறியவில்லையா? அறிந்தும் அறியாததுபோல் அரசியல்நோக்கில்செயல்படுகிறதா? எதிரிகளின் கூக்குரலுக்குப் பயப் படுகிறதா? என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. உரிய குத்தகை பாக்கிகளை நீதிமன்றங்கள்மூலம் பெறுவதற்குத் தடையாக இருந்த குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தை மேலும் ஆறுமாதகாலத்திற்கு நீட்டி 1979 ஜூலை 15-வரை அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. வருவாய் அளவையும் குறைப்பது; அதனையும் பெறமுடியாதவாறு முடக்குவது என்ற இருமுனைத் தாக்குதலிலிருந்து அறநிலையங்கள் உய்வது என்பது இயலாததாகவே தோன்றுகிறது. இது நீதியாகுமா? நேர்மையாகுமா? தருமந்தானுகுமா?

**இன்னொரு ஏமாற்றம்:**

ஒருகால் புதிய அறிவிப்பால் உற்சாகமடைந்து விவசாயி மேலும் தீவிர உற்பத்தியில் ஈடுபடுவான் என்று அரசு கருதுமானல் அதுவும் ஏமாற்றமேயாகும். இதுபற்றித் "தினமணி" தலையங்கம் தெளிவாக விளக்குகிறது:-

> "சாகுபடியாளரின் விகிதாசாரத்தை அதிகரித்தால் உற்பத்திபெருகும் என்று நினைப்பது ஒரு கற்பனையே! உண்மையில்ஏற்கனவே குடியானவருக்கு ஒரு வயலில் 10 மூட்டை கிடைப்பதாக வைத்துக்கொள்வோம்! அதிக உழைப்பு இல்லாமலேயே 13மூட்டைகிடைக்க, புதியசட்டம் ஏற்பாடு செய்யும். அவ்வளவுதானே ஒழிய உற்பத்தி பெருகிவிடாது. அதுமட்டுமல்ல. எப்படியும் 75 சதவிகிதம் கிடைத்து விடுமே! ஏனோதானோ என்று சாகுபடி செய்தாலும் பழைய 10 மூட்டை கிடைத்து விடுமே என்று கருதும்படிச் செய்து சாகுபடியாளரின் அலட்சியப்புத்தியும் தூண்டப்படலாம்."

எனவே, உண்மையான விவசாயியின் நலத்தையோ, அபரிமிதமான உற்பத்தியையோ வழங்காத 25 - 75 ஏற்பாட்டை அரசு மறுபரிசீலனை செய்து பழைய 40 - 60 நிலையேநீடிக்கச்செய்யும் என்று நம்புகின்றோம்.

**ஒரு கண்டனம்:**

அரசின் இந்த அறிவிப்புக்குறித்து, இந்து ஆலயப்பாதுகாப்புக் குழு தனது அச்சத்தையும், கண்டனத்தையும் தெரிவித்திருப்பது குறித்துப் பாராட்டவேண்டும். இதன் தலைவர் திரு. அ. வே. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கையில்,

"தமிழ்நாடு இந்து ஆலயப்பாதுகாப்புக் கமிட்டியும் மற்றும் பல இந்து ஸ்தாபனங்களும், குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்தும், பிற நிலச்சட்டங்களிலிருந்தும் ஆலயங்களுக்கு விலக்கு அளிக்குமாறு முதல்வரிடமும், இந்து அறநிலைய அமைச்சரிடமும், கடந்த பல மாதங்களாகத் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்திருப்பதுடன், மக்கள் சார்பாகவும் ஏராளமான கடிதங்கள் அரசுக்கு எழுதப்பட்டன. ஆனால் அரசு இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குப் பதிலாகக் குடிவாரதாரர் பாதுகாப்புச் சட்டத்தை ஜூலை 15 வரை நீடித்துள்ளது. இந்துக்களனைவரும் ஒன்று திரண்டு, இந்த ஆபத்தான முடிவினையும், வாரத்தின் விகிதத்தை 40 இல் இருந்து 25 ஆகக் குறைத்துள்ள முடிவால் சிறு நிலக்காரர்களும், ஆலயங்களும் பாதிக்கப்படாதிருக்க வேண்டிய அவசியத்தையும் அரசிடம் வலியுறுத்தவேண்டும்."

என்று கேட்டுக்கொண்டுள்ளார். பக்தி மிக்க தமிழ்நாட்டுச் சைவ வைணவ சமயங்களைச்சார்ந்த பெருமக்கள் இது குறித்து வாளா இராது, உரியவகை தங்கள் உணர்ச்சிகளை அரசுக்குத் தெரிவிப்பார்கள் என்று நம்புகின்றோம்.

**அரசுக்கும் மக்களுக்கும் வேண்டுகோள் :**

வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் அமல்செய்யப்போவதாக அறிவிக்கப்பெற்ற 25—75 மாற்றத்தை அரசு உடனடியாகக் கைவிடவேண்டும்; அல்லது அறநிலையங்களுக்காவது இதிலிருந்து விலக்களிக்க வேண்டும். உரிய நிலவருவாய் தவறாது கிடைக்க உதவுவதோடு, குடிவாரதாரர் பாதுகாப்புச் சட்டத்தை நீட்டிக் கொண்டேபோவதை நிறுத்தவேண்டும். இந்நாட்டுப் பெரும்பான்மை மக்களின் உணர்வுகளை அரசு நன்கு மதித்து, அவர்களின் திருக்கோயில்களை வாழவைக்க மனப்பூர்வமாக உதவவேண்டும்; இவ்வகையில் மக்களும் விழிப்போடு நின்று மாநாடுகள் கூட்டித் தீர்மானங்கள் இயற்றியும், தூதுக்குழுக்கள்மூலமாகவும் அரசுக்குத் தங்கள்உணர்ச்சிகளை விரைந்துவெளிப்படுத்த வேண்டும் என ஞானசம்பந்தம் அன்போடு வேண்டுகோள் விடுக்கிறது,

குடிமக்கள் வளர்க!

கோயில்கள் வாழ்க!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

**26-ஆவது குருமகாசந்நிதானம்**

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

**காடூர் அருள்மிகு சௌந்திரேசுவரர் திருக்கோயில் மகாகும்பாபிஷேக தரிசனத்திற்கு எழுந்தருளியபோது**

**வழங்கியருளிய**

# ஆசியுரை

**5—9—1976**

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டா' என்பது உலகநாதர் இயற்றிய 'உலகநீதி' கூறும் அறிவுரையாகும். கோயில் உள்ள ஊரில் குடியிருந்தால்மட்டும் போதாது அக்கோயில்களுக்கு நாள் தோறும் சென்று இறைவனை வழிபட வேண்டும் என்பதை வற்புறுத்தவே 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று 'கொன்றை வேந்தன்' என்ற நூலில் ஔவையார் கூறியுள்ளார்.

**ஊரும் பேரும் :**

ஊர்கள்தோறும் இறைவன் உறையும் திருக்கோயிலை நடுவணதாக அமைத்து அதைச்சூழ மக்கள் வாழும் வீதிகளை அமைத்தனர் பெரியோர். தமிழ்நாட்டில் பெரும்பாலான ஊர்களின் பெயர்கள் கோயில்களின் வரலாற்றை ஒட்டியே அமைந்து விளங்குதலைக் காணலாம். இறைவனைத் தொடர்புபடுத்தி உரைக்கும் வரலாறு ஒவ்வொரு ஊர்ப் பெயர்களின் பின்னும் மறைந்து இருப்பதைக் காணலாம். உதாரணமாக 'மாயூரம்' என்ற பெயர் அம்பிகை மயிலுருவாய் இறைவனைப் பூசை செய்த வரலாற்றை நமக்கு நினைவு படுத்துகிறது. 'தருமபுரம்' எமதருமன் வழிபட்டு அருள்பெற்றதால் ஏற்பட்ட பெயராக விளங்குகிறது. புள்ளிருக்கு வேளூர் - சடாயு, இருக்கு வேதம், முருகன், சூரியன் வழிபட்டதைநினைவுபடுத்துகிறது. இவ்வாறே ஊர்ப்பெயர்கள் பலவும் அவ்வூரில் விளங்கும் ஆலயம், தலமரம் முதலியவற்ரேடு தொடர்புடையதாய் விளங்குவதை அறியலாம்.

மக்கள் காடுகளில் வாழும் காலத்திலேயே கடவுளை வழிபட்டு வந்தார்கள். கடவுள் வழிபாடு முதலில் மரத்தடியில் தான் தொடங்கப் பெற்றது. அம்மரமே ஒவ்வொரு கோயில்களிலும் 'தலமரம்' எனப் போற்றப்படுகிறது.

**மனிதன் யார் ?**

ஒரு ஊர் சிறப்பு அடைவதற்கு அங்குவிளங்கும் ஆலயங் களோடு அவ்வூரில் வாழும் மக்களும் காரணமாகிறுர்கள். புறநானூறு என்னும் சங்கநூலில்,

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்று ஔவையார் பாடிய பாடல் ஒன்று உண்டு.

நாடாக இருந்தால் என்ன? காடாக இருந்தால் என்ன? மேடாக இருந்தால் என்ன? பள்ளமாக இருந்தால் என்ன? எந்த ஊர் நல்லவர் வாழும் ஊராக விளங்குகிறதோ அந்த ஊரே நல்ல ஊர்; அவ்வூர் வாழ்க என்பது அப்பாடலின் பொருள்.

மனிதன், மனிதன் எனும் நிலையில் வாழும்போதே அவன் நல் லவனுகின்றுன்; அவன் வாழும் காடும் நாடாகிறது என்று கூறலாம். வெறும் கண்ணும் மூக்கும் காதும் பொருந்தியிருப்பதுமட்டும் ஒரு மனிதனுக்குரிய அடையாளங்கள் அல்ல. உலகில் வாழும் உயிர்களைத் தொல்காப்பியர் ஆறுவகையாகப் பிரித்துக் கூறுவர். தொட்டாலுண ரும் உடல்உணர்வுமட்டும் உடைய உயிர் தாவரம். அதனோடு நாவறி வும் உடையன சங்கு, நத்தை போல்வன. அவற்றோடு மூக்கறிவும் உடையன எறும்பு, கரையான்போன்றன. மெய், நாக்கு, மூக்கு அறிவு களோடு கண்ணறிவும் உடையன வண்டு, தேனீ முதலியன. விலங்கு களும் பறவைகளும் அந்நால்வகை உணர்வுகளோடு செவியறிவும் உடையன. மனிதன் மேற்கூறிய உணர்வுகளோடு மனஉணர்வும் பெற்று விளங்குவதால்தான் மனிதன் எனப்படுகின்றுன். இதனுல் தான் உலக உயிர்களில் மனிதன் மேம்பட்டவனுக மதிக்கப்படு கின்றுன். ஆறுவது அறிவைப் பெற்ற மனிதன் அவ்வறிவுக்கேற்ற பண்புகளைப் பெருதபோது அவன் மனிதனில் தாழ்ந்தவனுகின்றுன்.

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்"

என்ற திருக்குறளிலும் வள்ளுவர் இக்கருத்தினை விளக்குகின்றுர்.

**மனித்தப்பிறவி வேண்டுமா ?**

உலகில் உயர்ந்த மக்கட்பிறப்பைப் பெற்றுள்ள மனிதன் மனிதப் பிறப்பின் பயனை அடைய முயலவேண்டும். அப்பரடிகள் ஒருபாடலில் இக்கருத்தைத் தெளிவாக விளக்கியுள்ளார். உலகில் வாழும் எல்லாப் பிறவிகளைக் காட்டிலும் மேம்பட்ட மனிதப்பிறவியைப் பெற்றஒருவன் அப்பிறவியின் பெரும்பயனாகவிளங்கும் இறைவனை வழிபடவேண்டும். தில்லையிலாடும் அவ்விறைவனின் குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், குமிண்சிரிப்பு, பனித்தசடை, பவளமேனியில் பால் வெண்ணீறு, இனித்தமுடைய எடுத்தபொற்பாதம் இவற்றைக்காணும் பேறுபெற்றால்-கண்டு வணங்கும் மனம் பெற்றால் மனித்தப்பிறவியின் பயனை நாம் பெற்றவர்கள் ஆவோம் என்று கூறுகின்றார் அப்பர். அப்பாடலைச் சிந்தியுங்கள்.

குனித்தபுருவமும் கொவ்வைச்செவ் வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதேஇந்த மாநிலத்தே.

மேலும், திருவிளையாடற்புராண ஆசிரியரும் இக்கருத்தினையே சிறிது மாற்றி இறைவன் புகழ் பாடும் பேறு பெறுவோமானால் மனிதப் பிறவி வேண்டும்; இன்றேல் இவ்வளவு பெரிய பிறவி தேவையில்லை என்ற கருத்தைக் குறிப்பால் உணர்த்துகின்றார். அப்பாடலையும் நோக்கு வோம்.

"பாயுடையார் விடுத்தபழி அழல், வழுதி
உடல்குளிப்பப், பதிகமோதும்
சேயுடைஆ ரணம்தினைக்குஞ் செவியுடையார்,
அளவிறந்த திசைகள்எட்டும்
தோயுடையார், பொன்னிதழித் தொடையுடையார்,
விடஅரவஞ் சுற்றும்ஆல
வாயுடையார், புகழ்பாடப் பெறுவேமேல்
வேண்டுவதுஇம் மனிதயாக்கை."

இதுபற்றித் திருமூலர் சிந்தனையையும் காண்போம்.

"பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந்தாரே"

என்பது திருமூலர் திருமந்திரம்.

உயர்ந்த குறிக்கோளை அடைவதற்கே உயர்ந்த பிறப்பு நமக்குத் தரப்பட்டுள்ளது ; இந்த உணர்வோடு வாழ்பவரே மனிதராவார் என்று அப்பாடலுக்குப் பொருள் காணுவது சிறப்புடைத்தாகும். மனிதப்பிறவிவேண்டுவதும் மகேசன் புகழ்பாடித் துதித்தற்கே ஆகும்; இல்லையேல் மாடாகப் பிறந்தாலும் குறைபில்லையே என்னும் ஆழமான கருத்து விளக்கம் அப்பாடலில் இருப்பதனை நாம் நன்கு உணரலாம்.

இங்ஙனம் அன்றி அப்பாடலுக்குத் " தில்லையில் நடமாடும் பெருமானைக் கண்டு வணங்கும்பேறு பெற்றால் மேலும்மேலும் மனிதப் பிறவிகளை நான் விரும்புகின்றேன் " என்று பொருள் கூறுவதில் சிறப்பில்லை.

**ஊரும் காடும் :**

மக்கள் வாழ்க்கையில் அடையத்தக்க முடிந்த குறிக்கோளாக உள்ள இறைவன் திருவடிப்பேற்றை அடைவதற்கு உதவும் திருக் கோயில்கள் இல்லாத ஊரைத் 'திருவில் ஊர்' என்றார் அப்பர். ஊருக் குரிய இலக்கணங்களை அப்பரடிகள் வகைசெய்து உணர்த்தும் பாடல் ஒன்றை நினைவுக்குக் கொண்டுவருகிறோம்.

" திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணீ றணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையால் பாடா ஊரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா ஊரும்
அவை எல்லாம் ஊரல்ல அடவி காடே"

என்பது அப்பாடல்.

திருக்கோயில்கள் இல்லாத ஊரும், திருவெண்ணீறு அணியாத மக்கள் வாழும் ஊரும், திருஇல்லாத ஊர்களாகும். மக்கள் இறைவன் உறையும் ஆலயங்களுக்குச் சென்று உடலை வளைத்துப் பணிந்து அன்பு செய்தல் வேண்டும். " பணிந்தெழுந்து குறைந்தடைந்தார் பாவம் போக்ககிற்பான் ' என்பது அப்பர்வாக்கு. " கும்பிட்டுத் தட்ட மிட்டுக் கூத்தாடித்திரியே " [என்று சிவஞானசித்தியார்] கூறுகிறது. அவ்வாறு பத்தி செய்யாதவர் வாழும் ஊர்களும் ஊர்கள் ஆகா. சிறிய ஊர்களுக்கு ஒருகோயில் போதும்; பெரிய நகரங்களில் பலகோயில்கள் இருக்கவேண்டும். அப்போதுதான் ஆங்காங்குள்ளவர்கள் ஆலயங் கட்கு எளிதாகச் சென்று வழிபடுவர். ஆலயங்கள் இருந்தால்மட்டும் போதாது ; ஆலயங்களில் திருவிழாக்கள் பலவும் நிகழவேண்டும். 'கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல் ' என்பது

சேக்கிழார் அருள்வாக்கு. திருக்கோயில்களில் முழங்கும் சங்கு, மணி ஓசைகள் கேட்காத ஊர்கள் ஊர்கள் ஆகா. திருவிழாக் காலங்களில் பக்தர்கள் விதானங்கள் அமைத்து வெண்கொடிகள் முதலிய கட்டி அதனைக் கொண்டாட வேண்டும். ஆலயங்களுக்குச் சென்று அரும்புகளையும் மலர்களையும் தொடுத்து இறைவனுக்கு அணிவித்துத் தரிசித்துப் பின் உண்ணும் முறைகள் மக்களிடம் வளரவேண்டும். இவ்வாறு கோயில்களும் வழிபாட்டு முறைகளும் திருவிழாக்களும் நிகழும் ஊர்களே ஊர்கள் ஆகும். இவையில்லாத ஊர்கள் ஊர்கள் ஆகா என்றும், அவ்வூர்கள் கொடிய விலங்குகள் வாழும் காடுகளாகும் என்றும் கூறுகின்ருர் அப்பர்.

**காடூர் :**

இன்று நாம் கூடியிருக்கும் இவ்வூர் காடுகள் சூழ்ந்த முல்லை நிலத்தைச் சார்ந்துள்ளதால் காடூர் என வழங்கப்படுகின்றது. இவ்வூரில் சிவன்கோயில், பெருமாள் கோயில், கிராமதேவதைக் கோயில்கள் பலவும் உள்ளன. திருவிழாக்கள் நடைபெறுகின்றன. மக்கள் பக்தியும் பண்பாடும் உடையவர்களாக உள்ளனர். ஆதலின் 'காடூர்' என்று பெயர் இருந்தாலும் நல்லஊராகவே இருக்கிறது. இன்று இங்கு குடமுழுக்குப்பெருவிழா நடைபெறுகிறது. இவ்விழா சிறப்புற நடைபெறுவதற்குக் காரணமாக விளங்குபவர் அன்பர், திரு. நடராஜப் பிள்ளை ஆவார். அவரது பெருமுயற்சியாலும் இவ்வூரில் உள்ள அன்பர்களின் உதவியாலும் எல்லாக் கோயில்களுக்கும் மிகப்பெரிய திட்டத்தில் திருப்பணிகள் செய்விக்கப்பெற்று மகாகும்பாபிஷேகங்கள் இன்று நிகழ்த்தப்பெற்றுள்ளன.

**பாராட்டும் ஆசியும் :**

அன்பர் நடராஜப் பிள்ளை மிகக் குறுகிய காலத்தில் பெரும் பொருட்செலவில் இக்கும்பாபிஷேகத்தை நடத்தியுள்ளார். காடூர் கிராமம் புதுப்பொலிவு பெற்று விளங்குகிறது. அவர், இடைவிடாத முயற்சியால் சாலைகள் அமைத்தும் கோயில்களைத் திருப்பணிகள் செய்தும் பெரிய திட்டத்தில் இக்கும்பாபிஷேக விழாவை நடத்தியுள்ளார். இவருடைய தெய்விகத் தொண்டுகளுக்கு அருந்துணையாக விளங்கிய அரியலூர் மணிவாசக மன்றத்தின் செயலர் திரு. குமாரசாமிப்பிள்ளை அவர்களது அரிய முயற்சிகள் பாராட்டற்குரியன.

அன்பர் நடராஜப்பிள்ளை அவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் எல்லா நலங்களோடும் நீடுவாழவும், காடூர் மக்களும் இம்மகா கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்ட மெய்யன்பர்களும் எல்லா நலங்களும் பெற்றுச் சிறக்கவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

**திருப்பணி செய்வோர் சிறப்புடன் வாழ்க.**

# அரசாணையால் ஆலயங்களின் பூஜைகளை மறந்துவிடவேண்டியதுதான்!

## குத்தகைதாரர் பாதுகாப்பு நீடிப்புபற்றி ஆலய பாதுகாப்புக்குழுத் தலைவர் அச்சம்

தமிழ்நாட்டில் முக்கியமாக காவிரிடெல்டா பகுதிகளில் சம்பா மற்றும் தாளடி அறுவடை மாமூல்அளவு அல்லது கிட்டத்தட்ட மாமூலாக இருந்த போதிலும், நில வருமானத்தையே முக்கியமாக எதிர்பார்த்துள்ள கோயில்களின் நிலைமை தொடர்ந்துபரிதாபகரமாக உள்ளது. குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டத்தை ஜூலை 15உ வரை நீடித்து அரசு பிறப்பித்துள்ள உத்தரவே இதற்குக் காரணம். இதனால், கோயில் நிலங்களை சாகுபடி செய்துவரும் பல குத்தகைதாரர்கள் கோயில்களுக்குச் செலுத்தவேண்டிய வார பாக்கிகளைச் செலுத்தாமல் இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களைச் சட்டப்படி வெளியேற்ற முடியாதபடி பாதுகாப்பளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இந்து ஆலய பாதுகாப்புக் குழுத்தலைவர் திரு. ஏ, வி. ஆர். கிருஷ்ணசாமி ரெட்டியார் இன்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில்,

'இந்த ஆண்டுநல்ல அறுவடை இருப்பதால், குறைந்தபட்சம் இந்த ஆண்டாவது தங்கள் நிலங்களிலிருந்து வாரத்தைப் பெறமுடியும் என்று ஆலயங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தநிலையில், குடிவாரதாரருக்குப்பாதுகாப்பு அளிக்கும் சட்டத்தை ஜூலை 15உ வரை நீடிக்கும் அரசின் முடிவு பற்றி அதிர்ச்சி அடைந்துள்ளன'

என்று குறிப்பிட்டுள்ளார். மாமூல் அறுவடை உள்ளதால் இந்த ஆண்டு நிலவும் சுமுகமான சூழ்நிலையில் அரசின் முடிவு பேரிடியாக வந்துள்ளது என்கிறார்.

இந்த அதிர்ச்சியிலிருந்து ஆலயங்கள் மீள்வதற்குள் முதலமைச்சரின் அறிவிப்பு மற்றொரு அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக உள்ளது.

குடிவாரதாரர் நிலச்சுவான்களுக்குச் செலுத்தவேண்டிய நியாய வார விகிதத்தை 40சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாகக்குறைத்திருப்ப தாக அறிவித்துள்ளது, சிறு நிலச்சுவான்களையும், ஆலயங்களையும் கடுமையாகப் பாதிக்குமென்று திரு. ரெட்டியார் கூறியுள்ளார்.

**முறையீட்டைக் கேட்டும் முரணான முடிவு**

தமிழ்நாடு இந்து ஆலய பாதுகாப்புக் கமிட்டியும், மற்றும் பல ஹிந்து ஸ்தாபனங்களும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டத்திலிருந் தும், பிற நிலச் சட்டங்களிலிருந்தும் ஆலயங்களுக்கு விலக்களிக்கு மாறு முதல்வரிடமும், இந்து அறநிலைய அமைச்சரிடமும், கடந்த பல மாதங்களாகத் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்திருப்பதுடன், இந்தச் சட்டங்களிலிருந்து ஆலயங்களுக்கு விலக்களிக்கும்படி குடி மக்கள் பலரும் அரசுக்குக் கடிதங்கள் எழுதியிருப்பதாகவும் கூறினர்.

ஹிந்து அறநிலைய பாதுகாப்புக் கமிட்டியின் முறையீடுகளை முதலமைச்சரும் அறநிலைய அமைச்சரும் பொறுமையுடன் கேட்டனர். ஆனால், அரசு இக்கோரிக்கையை நிறைவேற்றுவதற்குப் பதில் குடி வாரதாரர் பாதுகாப்புச் சட்டத்தை ஜூலை 15உவரை நீடித்துள்ளது பற்றி வருத்தம் தெரிவித்தார்.

ஹிந்துக்கள் அனைவரும் ஒன்று திரண்டு, அரசின் இந்த ஆபத் தான முடிவு, வாரத்தின் விகிதத்தை 40 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாகக் குறைத்துள்ள முடிவால் சிறு நிலக்கிழார்கள், ஆலயங் களின் நலன்கள் பாதிக்கப்படாமல் தடுக்க வேண்டிய அவசியத்தை அரசிடம் வலியுறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

**கோவில்களில் பூஜை நின்றுவிடும்**

தமிழ்நாட்டில் இன்று பல ஆலயங்கள் ஆகம விதிமுறைப்படி நித்திய பூஜைகளைச் செய்ய முடியாத நிலையில் உள்ளன. அரசின் இந்தப்போக்கு நீடித்தால், பல ஆலயங்களில் பூஜை செய்வதையே மறந்துவிட வேண்டியிருக்கும் என்று எச்சரித்தார்.

ஆகவே, இன்று தமிழ்நாட்டில் ஆலயங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அவல நிலைமைபற்றி ஹிந்துக்கள் எண்ணிப் பார்க்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றார்.

**வாரம் இல்லை, வரி உண்டு!**

தமிழ்நாடு அரசு அளித்துள்ள புள்ளிவிவரப்படி, தமிழ்நாட்டில் மொத்தம் 51833 ஹிந்து மதஸ்தாபனங்களுக்கு மொத்தம் 6,10,741

ஏக்கர் நஞ்சை மற்றும் புஞ்சைநிலங்கள் சொந்தமாக உள்ளன. இதில், 24605 கோவில்கள் ஹிந்து அறநிலையத் துறையின் பராமரிப்பின் கீழ் உள்ளன. இவற்றிற்கு 5,70,304 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அவை குத்தகை மூலம் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. கடந்த 4 ஆண்டுகளாகக் குத்தகை சாகுபடியாளர்களை நிலங்களிலிருந்து வெளியேற்றுமல் பாதுகாப்பு அளிப்பதை 6 மாதத்திற்கு ஒருமுறை அரசு நீடித்துக்கொண்டே வந்திருக்கிறது. இதன் விளைவாக, ஆலயங்களுக்கு அவற்றின் நிலங்களிலிருந்து எதுவும் கிடைப்பதில்லை. அல்லது சிறிதளவே நியாய வாரம் கிடைக்கிறது. மாருக, அரசுக்கு மற்ற நிலச்சுவான்களைப் போலவே இக்கோவில்கள் நிலவரி, கிஸ்தி, சர்சார்ஜ் வரி முதலியன செலுத்திவரவேண்டியுள்ளது.

## அரசாணை நியாயமற்றது

'தினமணி' நிருபர் கடந்த 4 நாட்களாக திருச்சி தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் பல சிறு நிலச்சுவான்களைச் சந்தித்துப் பேசியபோது, இந்த ஆண்டு கிட்டத்தட்ட மாமூலான அறுவடை உள்ளபோது, குடிவாரர் பாதுகாப்பு சட்டத்தை ஜூலை 15உ வரை அரசு நீடிக்க நியாயமே இல்லை என்றே அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு குடிவார பாதுகாப்பை அரசு நீடித்துள்ளதானது, இந்த ஆண்டு ஜூலை 15உ வரை நிலங்களிலிருந்து வெளியேற்ற முடியாததால், குத்தகைதாரர்கள் தாங்கள் செலுத்தவேண்டிய நியாய வாரத்தைச் செலுத்தாமல் இருக்க மறைமுக தூண்டுகோலாக அமைந்துள்ளது என்று கண்டித்துள்ளனர். 1977 நவம்பரில் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டது. ஆனல் இந்த ஆண்டு வெள்ளமும் இல்லை; விளைச்சலும் மாமூலாக உள்ளது. இந்நிலையில் இந்த ஆண்டு மகசூலில் தங்களுக்குச் சேர வேண்டிய பங்கு ஏன் மறுக்கப்படவேண்டும் என்று கேட்கிருர்கள்.

## அவலை நினைத்து உரலை இடிக்கிருர்கள்

பஞ்சாயத்துத் தேர்தல்கள் வரவிருப்பதையும், தஞ்சை, நாகப்பட்டினம் மேல்சபை உபதேர்தல்கள் நடக்கவிருப்பதையும் மனதில் கொண்டே அரசு இந்த முடிவுசெய்திருப்பதாகத் தோன்றுகிறது என்றே அவர்கள் கருதுகின்றனர். அரசு மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் இவ்வாறு தேர்தலைக் கருத்தில் கொண்டதாக இருப்பதால், ஏழை, சிறு நிலச்சுவான்கள் பெரிதும் அவதியுறுகிருர்கள் என்று கூறினர்.

நன்றி. —தினமணி 4—3—79

# "சிறு நிலச்சுவான்கள்வர்க்கமே அழிந்துவிடும்"

**ஒன்பதுவேலி – நிலச்சுவான் கூறுவது :–**

1975-லிருந்து தமிழ்நாடு அரசு, குத்தகை சாகுபடியாளர்களை அவர்கள் சாகுபடி செய்யும் நிலங்களிலிருந்து வெளியேற்ருமல் பாது காப்பு அளிப்பதை ஒவ்வொரு 6 மாதத்துக்கும் நீடித்துக்கொண்டே வந்துள்ளது. அந்தமாதிரி பாதுகாப்பு காலத்தை நீடித்துக்கொண்டே போகும் ஒவ்வொரு தடவையும், குத்தகை வார பாக்கிகளை வசூலிப் பது சம்பந்தமாக கோர்ட்டுகளில் ஏராளமான மனுக்கள் பைசலாகாமல் இருந்து வருவதாக அரசு சொல்லி வருகிறது. தற்போதைய பாது காப்பு காலம் (ஜூலை 15உவரை நீடித்துள்ள காலம்) முடிவடைந்தும், குத்தகைதாரர் தான் செலுத்தவேண்டிய வாரபாக்கிகளை ஒட்டுமொத் தமாகச் செலுத்த முடியாமல் போய்விடும் என்று மேலத் தஞ்சை ஒன்பதுவேலி கிராமத்தைச்சேர்ந்த ஒரு சிறு நிலச்சுவான் கூறுகிருர். ஆகவே, இச்சங்கடமான நிலையைப் போக்கவும். குத்தகைதாரர்களைக் கோர்ட்டுகள் மூலம் வெளியேற்ற மனு தாக்கல்செய்யாமல் தவிர்க்க வுமே இப்போது அரசு ஜூலை 15உ பாதுகாப்புச் சட்டத்தை நீடித் துள்ளது. குத்கைதாரருக்கு நிவாரணம் அளிக்க, நிரந்தரமான ஏற்பாட்டைச் செய்யும்வரை பாதுகாப்புச் சட்டத்தை அரசு நீடித்துக் கொண்டேயிருக்கிறது. அப்படியானுல், நிரந்தர நிவாரண நடவடிக் கையை உருவாக்க அரசு இன்னும் எத்தனை காலம் அவகாசம் எடுத் துக் கொள்ளப்போகிறது என்று கேட்கிருர். அதற்குப்பதில் அதிகார வர்க்கத்தினர், இந்த நீடிப்புக்கு வேறு நல்ல காரணத்தைக் கூறக் கூடாதா என்று வேடிக்கையாகக் கேட்கிருர்.

**தண்டன்கோரை – சிறுநிலக்கிழார் கூறுவது :–**

முந்தைய தி. மு. க. அரசு குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக அறிவித்தபின், 1977-ல் லோக்சபா தேர்தலை மனதில் கொண்டு ராஷ்டிரபதி ஆட்சியின்போது இச்சட்டம் நீடிக்கப்பட்டது. பின்னர், தமிழ் நாட்டில் அசெம்பிளி தேர்தல்கள் வந்தன. 1977 நவம்பரில் வெள்ளம் வந்ததை ஒருகாரணமாகக்கொண்டு அரசு சட் டத்தை மேலும் நீடித்தது. இந்த ஆண்டு ஜூனில் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெற இருப்பதை கருத்தில்கொண்டு ஜூலைவரை இச்சட்டத்தை அரசு நீடித்துள்ளது என்று தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தண்டன்கோரை சிறுநிலக்கிழார் ஒருவர் கூறினுர். ஆகவே, தேர்தல்பற்றி அறிவிப்பு வெளியானுலே தங்களுக்கு அதிர்ச்சி ஏற்படு வதாகவும், அரசின்போக்கு இப்படியே இருந்தால், தங்கள் நிலங்களைக் குத்தகைக்கு விட்டுள்ள சிறுநிலக்கிழார்கள் என்ற ஒரு தனிவர்க்கமே இனி இல்லாமல் போய்விடும் என்று அச்சம் தெரிவித்துள்ளார்.

# 25 : 75 விகிதம்

## நிலச்சுவான்களுக்குமட்டுந்தானு ?

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு நிலச்சுவான்கள் மட்டும் ஏன் இலக்காகவேண்டும் என்று நாகர் கிராமத்தைச் சேர்ந்த நிலச்சுவான் ஹரிஹரன் கேட்கிருர்.

குத்தகைதாரர் பாதுகாப்பை ஜூலை 15உ வரை நீடிக்கும் அரசு முடிவுபற்றி **திரு. ஹரிஹரனை** நமது நிருபர் பேட்டி கண்டபோது கூறியதாவது :—

பஸ் போக்குவரத்துத் தொழிலில் பஸ்களை ஓட்டுவது டிரைவர்களும் கண்டக்டர்களுந்தான். ஆகவே, அன்ருடம் டிக்கெட் விற்பனை மூலம் வசூலாகும் பணத்தில், பஸ் சொந்தக்காரர்களும், பஸ் ஊழியர்களும் 25 : 75 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்று அரசு நிர்ணயம் செய்யலாமே? இதே போல, திரைப்படத் தொழிலிலும், படங்கள் தயாரிப்பதில் சினிமா டெக்னீஷியன்களும், இதர ஸ்டுடியோ ஊழியர்களும் பெரும்பங்கு வகிக்கிருர்கள். ஒவ்வொரு படத்தின் மூலமும் வசூலாகும் பணத்தில் படத்தயாரிப்பாளர்களும் ஸ்டுடியோ தொழிலாளர்களும், 25 : 75 விகிதத்தில் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று நமதுமதிப்புக்குரிய முதலமைச்சர் அறிவிக்கலாமே?

மொத்தத்தில், அரசின் இம் முடிவால் சிறுநிலச்சுவான்கள் முகங்களில் கவலை படிந்துள்ளது. இனி என்ன துயரங்களுக்கு நாம் ஆளாக வேண்டியிருக்குமோ என்ற அச்ச உணர்வுடன், செய்வது அறியாது திகைத்துப் போயிருக்கிருர்கள்.

நன்றி. —தினமணி 4—3—79

# சட்டசபையில் நெல்லை ஜெயமணி

கோவில் நிலம்பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. மற்ற மதத்தினருக்குத் தரப்படும் பாதுகாப்பு இந்துமதக்கோவில்களின் சொத்துக்களுக்கு இன்று இல்லை. இதை அரசு உணரவேண்டும். ஆலயங்களை அலட்சியப்படுத்தப்படுத்த நாட்டுக்குக் கேடுவரும். எனவே 'வக்ப்' போர்டு உள்ளதைப்போல, இந்து கோயில்களுக்கும் தனியாக ஒரு போர்டை நியமிக்க அரசு முன்வரவேண்டும்.

'தெய்வம் இகழேல்' இது பெரியோர்வாக்கு. தந்தை பெரியார் கூட ஒருகோவிலைச் சொந்தமாக வைத்துக்கொண்டார். ஐகோர்ட்டில் வழக்குப்போட்டு, அக் கோயிலைத் தன்னுடன் வைத்துக்கொண்டார்.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், பாரம்பரியத்தை விட்டு விட யாரும் விரும்பமாட்டார்கள் என்பதைத் தெளிவு படுத்தத்தான்.

நன்றி. — தினத்தந்தி 9—3—79

---

## அட்டைப்பட விளக்கம்

நவராத்திரி என்பது, சாந்திரமானரீதியில் கணக்கிடப்படும் சைத்திர மாத வளர்பிறைப் பிரதமைமுதல் ஒன்பதுநாள் உமாதேவியைக் குறித்து விரதமிருந்து பூசிக்கும் வசந்த நவராத்திரியையும், கார்காலமாகிய (சரத்ருது) புரட்டாசிமாதத்தில் வளர்பிறைப் பிரதமைமுதல் ஒன்பதுநாள் பூசிக்கும் சாரதா நவராத்திரியையும் குறிக்கும். வசந்தருது சரத்ருதுவாகிய இரண்டு ருதுக்களும் எமனுடைய இரண்டு கோரைப்பற்களுக்குச் சமமாக உள்ளவை. அவ்விரண்டினுள் வசந்த ருதுவில் வெப்பமிகுதியால் அம்மை முதலியநோய்களும், சரத்ருதுவில் தட்பமிகுதியால் காலரா முதலிய நோய்களும் பெருகி மக்களைத் துன்புறுத்துவதால் அவற்றினின்றும் விடுதலைபெற உலகமாதாவாகிய உமாதேவியை விரதமிருந்து பூசித்தல்வேண்டும்.

இவ்விரு நவராத்திரிகளுள் வசந்த நவராத்திரி விழா, தருமை ஆதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் எழுந்தருளி அருள்வழங்கும் ஸ்ரீ வனதுர்க்காதேவிக்கு 28—3—79 புதன்கிழமைமுதல் 5—4—79 வியாழக்கிழமை முடிய சிறப்பாக நடைபெறும். விழா நாட்களில் இரவு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நாள்தோறும் நவசக்தி அருச்சனை செய்வதன்மூலம் லக்ஷார்ச்சனையும் நிகழும்.

# திருவிடைமருதூர்த் தலச் சிறப்பு

**தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,**

**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்** எம். ஏ.

திருவிடைமருதூர் தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் — கும்ப கோணம் இருப்புப்பாதையில் இரயில் நிலையமாக அமைந்துள்ளது. மாயூரம் — கும்பகோணம் பேருந்துச்சாலையில் விளங்குகிறது. புகை வண்டி பேருந்து போக்குவரத்து வசதிகள் மிகுதியும் உள்ள தலம்.

இது காவிரித் தென்கரைத் தலங்களில் 20-வது தலம். இத் தலம் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமானது.

**பெயர்க் காரணம் :** திருவிடைமருதூர் எனவும் மருதவனம் எனவும் வழங்கும் இத்தலம் வடமொழியில் மத்தியார்ச்சுனம் என வழங்கப்பெறும். அர்ச்சுனம் — மருத மரம். வடக்கே கர்நூல் மாவட்டத்திலுள்ள ஸ்ரீபர்ப்பதமாகிய மல்லிகார்ச்சுனமும், தெற்கே நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திற்கு அருகேயுள்ள திருப் புடைமருதூராகிய புடார்ச்சுனமும் விளங்க இவற்றின் இடையே இத்தலம் உள்ளதால் மத்தியார்ச்சுனம் என்ற பெயரைப் பெற்று விளங்குகிறது. இத்தலங்களைத் தமிழில் தலைமருது, கடைமருது, இடைமருது எனக்கூறுவர்.

மத்தியம் — நடு. அருச்சுனம் — நின்மலத்தானம் எனப்பொருள் கொண்டு ஆதிசத்தியின் இதயகமல மத்தியில் தியானிக்கப்படும் பெருமான் விளங்குமிடம் என்ற கருத்தை உணர்த்துவதாகவும் கூறுவர்.

இத்தலத்திற்குத் திருவிடைமருதூர் சண்பகாரண்யம் சத்திபுரம் முதலிய பன்னிரண்டு திருப்பெயர்கள் தல புராணத்தில் கூறப்படு கின்றன.

**தலப்பெருமை :** வரகுணதேவ பாண்டியனுக்குப் பிரமகத்தி நீங்கிய தலம். இப்பிரமகத்தி இரண்டாம் கீழைக்கோபுரவாயிலின் வலப்பக்கத்தில் இருக்கிறது. கிழக்கு வாயிலில் பட்டினத்தடிகளும் மேற்கு வாயிலில் பத்திரகிரியாரும் உள்ளனர். அம்பிகை மௌனமா யிருந்து தவஞ்செய்த திருக்கோலமாகிய மூகாம்பிகை சந்நிதி அம்பாள்

கோயில்வாசலில் தனியே உள்ளது. பெரிய பிராகாரத்திற்கு அசுவ மேதப்பிராகாரம் என்று பெயர். அதனை வலம்வரின் அசுவமேத யாகம்செய்த பயன் கைகூடும் என்பது மரபு. பேய் பிடித்தவர்களும் பைத்தியம் பிடித்தவர்களும் இப்பிராகாரத்தை வலம் வந்து குண மடைகின்றனர் என்பதை இன்றும் கண்கூடாகக் காணலாம்.

இத்தலத்தை மகாலிங்கத் தலமாகக் கொண்டு இதனைச்சுற்றி ஒன்பது பரிவாரத் தலங்கள் விளங்குகின்றன. திருவலஞ்சுழி - விநாயகர் சந்நிதியாகவும், சுவாமிமலை - முருகன் சந்நிதியாகவும், சிதம்பரம் - நடராசர் சந்நிதியாகவும், சூரியனார் கோயில் - நவக் கிரகங்களின் சந்நிதியாகவும், ஆலங்குடி - தக்ஷிணாமூர்த்தி சந்நிதி யாகவும், சீகாழி - பைரவர் சந்நிதியாகவும், திருவாவடுதுறை - நந்தி தேவர் சந்நிதியாகவும், திருவாரூர் - சோமாஸ்கந்தர் சந்நிதியாகவும், திருவாய்ப்பாடி - சண்டேசர் சந்நிதியாகவும் கொண்டு இத்தலம் மகாலிங்கத் தலமாகத்திகழ்கிறது. இத்தலத்தில் நிகழும் தைப்பூச விழா புராணப்பெருமை உடையது. தைப்பூசத்தன்று காவிரியில் அயிராவணத்துறையில் சுவாமி சென்று தீர்த்தம் கொடுத்தருளுவார்.

உமாதேவியார், விநாயகர், முருகன், திருமால், காளி, இலக்குமி, சரஸ்வதி, வேதங்கள், வசிட்டர், உரோமசர், அயிராவணம், சிவ வாக்கியர், கபிலர், அகத்தியர் முதலியோர் வழிபட்ட தலம். “திரு விடைமருதூர்த் தெருவழகு” என்பது இவ்வூரின் வீதி அழகைக் குறிப்பிடும் பழமொழியாகும்.

**கோயில் அமைப்பு:** கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. சுவாமி, அம்பாள் கிழக்கு நோக்கி உள்ளனர். கீழைக்கோபுரத்திற்கு அருகில் திருமதிலையொட்டி காருண்யாமிர்த தீர்த்தம் விளங்குகிறது.

கோயிலின் நான்கு பக்கங்களிலும் நான்கு இராச கோபுரங்கள் உள்ளன. கோயிலின் உள்ளே பாண்டியன் பெயரால் கோபுரம் ஒன்று உள்ளது. அதனையும் சேர்த்து இக்கோயிலில் ஐந்து கோபுரங்கள் உள்ளன.

திருக்கோயிலில் நான்கு பிராகாரங்கள் உள்ளன. வெளிப் பிரா காரமாகிய மூன்றும் பிராகாரம் அசுவமேதப் பிராகாரம் எனப்படும். சுவாமி கோயிலையும், அம்பாள் கோயிலையும் வலம் வருதற்குரியது. இரண்டாம் பிராகாரம் கொடுமுடிப் பிராகாரம் எனப்படும். இது சுவாமி கோயிலைமட்டும் வலம் வருதற்குரியது.

இப்பிராகாரத்தில் கலையழகு பொருந்திய சுதைச் சிற்பங்கள் உள்ளன. அதையடுத்து விளங்கும் பிராகாரம் பிரணவப் பிராகாரம்

எனப்படும். இதுவும் சுவாமியை வலம் வருதற்குரியது. இதையடுத்து, உட்பிராகாரம் உள்ளது. அம்பாள்கோயில் சுவாமிகோயிலின் வலது பக்கத்தில் விளங்குகிறது. இக்கோயிலுக்கு இரண்டு பிராகாரங்கள் உள்ளன. கோயிலின் நான்கு பிராகாரங்களோடு திருவீதியையும் சேர்த்தால் ஐந்து பிராகாரங்கள் ஆகும்.

தேரோடும் நான்கு வீதிகளின் மூலைகளிலும் நான்கு விநாயகர் கோயில்களும், தேரடியில் ஒரு விநாயகர் கோயிலும் உள்ளன. கீழ வீதியில் விசுவநாதர் கோயிலும், மேலவீதியில் ரிஷிபுரீசுவரர் கோயிலும், தெற்கு வீதியில் ஆத்மநாதர் கோயிலும், வடபால் சொக்கநாதர் ஆலயமும் உள்ளன. நாற்றிசைகளிலும் நான்கு லிங்கங்கள் விளங்க நடுவே மகாலிங்கப் பெருமான் விளங்குவதால் இத்தலத்தைப் பஞ்சலிங்கத் தலம் எனவும் கூறுவர்.

வடக்குக் கோபுரவாயிலில் அகோரவீரபத்திரர் கோயிலும், மேற்குக் கோபுரவாயிலில் குமரன் கோயிலும் உள்ளன.

**கோயிலுக்குள் :** கீழைக்கோபுரவாயில்வழியே கோயிலுக்குள் நுழைந்ததும் நமக்குக் காட்சிதருவது படித்துறை விநாயகர் கோயிலாகும். இவ்விநாயகர் காவிரிப் படித்துறையில் விளங்கியவர் ஆதலின் படித்துறை விநாயகர் எனப்பெறுவார். அவ்விநாயகர் கோயிலைத் தொடர்ந்து முன் மண்டபத்தில் நந்தி பலிபீடங்கள் உள்ளன. இரண்டாம் கோபுரத்தைக்கடந்து உள்ளே சென்றால் அழகிய மகாமண்டபம் சுவாமி சந்நிதியை அழகு செய்து விளங்குவதைக் காணலாம்.

அதையடுத்து மூன்றும் கட்டைக் கோபுரத்தைக்கடந்து உள்ளே சென்றால் முதற்பிராகாரம். இதனை வலம்வரும்போது தெற்குப் பிராகாரத்தில் ஆண்ட விநாயகர் வடக்கு முகமாக எழுந்தருளியுள்ளார். இவரைத் தரிசித்து, சுவாமி சந்நிதியை அடையலாம். சுவாமி சந்நிதி பெருஞ்சிறப்போடு திகழ்கிறது.

பிரணவப் பிராகாரத்தில் வடக்கே தலவிருக்ஷமாகிய மருத மரம் உள்ளது. அதன் எதிரே மேல்பால் வேம்படிக் குமரர் கோயில் உள்ளது. இரண்டாவது பிராகாரமாகிய கொடுமுடிப் பிராகாரத்தின் வடபால் சொக்கநாதர் கோயில் உள்ளது. மழைவேண்டும் காலங்களில் இவ்விறைவர்க்கு அபிஷேகம் செய்து மேகராகக் குறிஞ்சிப்பண் பாடினால் மழை பெய்யும். அம்பாள் சந்நிதியின் வெளிப்பிராகாரத்தில் வடக்கு நோக்கிய நிலையில் மூகாம்பிகை சந்நிதி உள்ளது. ஐம்பத்திரண்டு சக்தி பீடங்களில் இது ஒன்று எனக்கூறுவர்.

மூகாம்பிகை கோயில் விமானம் காசி விசுவேசர் ஆலய அமைப்பிலுள்ளது. இக்கோயிலில் மேரு சக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

அம்பாள் கோயில், இரண்டு பிராகாரங்களுடன் கிழக்கு நோக்கி, சுவாமி கோயிலுக்கு வலது பக்கம் விளங்குகிறது.

**மூர்த்திகள் :** தலவிநாயகர் ஆண்ட பிள்ளையார் எனப்பெறுவார். இவர் முதற்பிராகாரத்தில் சுவாமிக்குத் தென்பால் வடக்கு முகமாக விளங்குகிருர். சிவபெருமான் கட்டளைப்படி உரோமச முனிவர் வருமளவும் ஸ்ரீ மகாலிங்கமூர்த்தியை வழிபாடு செய்துவந்த அன்பர்களுக்கு யாதொருஇடையூறும் அணுகாவண்ணம் ஆண்டவர் ஆதலின் ஆண்டபிள்ளையார் எனப்பெயர் பெற்ருர்.

**சுவாமி :** அருள்மிகு மகாலிங்கமூர்த்தி, மருதவனேசர், மருதவாணர், ஏகநாயகர் முதலிய பெயர்களும் உள்ளன.

**அம்பிகை :** அருள்மிகு பெருநலமுலையம்மை. வடமொழியில் பிரகத்சுந்தரகுசாம்பிகை என வழங்குவர்.

அகத்தியர், காசிபர், உரோமசர், சோழன், சேரன் ஆகியோர் பூசித்த இலிங்கவடிவங்களும், சகஸ்ர லிங்கமும் பஞ்சபூத லிங்கங்களும் உள்ளன. கொடுமுடிப்பிராகாரத்தில் சொக்கநாதருக்குப் பின்னல் ஈசானதிசையில் இருபத்தேழு இலிங்கங்கள் உள்ளன. மருதமர நிழலில் உரலில் கட்டுண்ட கண்ணபிரான் திருவுருவம் உள்ளது. மருத மரத்தின் மேல்பால் முருகன் கோயில் உள்ளது. அருள்மிகு விசுவநாதர், ஆன்மநாதர் சொக்கநாதர் ஆலயங்களும் உள்ளன.

தட்சிணமூர்த்தி, அர்த்தநாரீசர், மருதநாயகர் முதலிய மூர்த்திகள் தரிசிக்கத்தக்கன.

சமயாசாரியர், அறுபத்துமூவர், பட்டினத்தார், பத்திரகிரியார், காசிபர், அகத்தியர், சப்தகன்னியர், வரகுணபாண்டியன் முதலியோர் திருவுருவங்கள் வழிபடுதற்குரியன.

**தீர்த்தம் :** காவிரி. இது கோயிலின் வடபால் அரைமீட்டர் தூரத்தில் ஓடுகிறது. இத்தலத்திற்குப் பெருமைதரும் தீர்த்தம் இது. தைப்பூசத் திருநாளன்று மகாலிங்கப்பெருமான் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளுவர். தைப்பூசத் திருநாள்விழா தேவாரத் திருமுறைகளில் மிகவும் சிறப்புடைய விழாவாகக் கூறப்படுகிறது.

**காருண்யாமிருத தீர்த்தம்:** கங்கை முதலிய நதிகள் இத்தீர்த்தத்தில் நீராடிப் புனிதத் தன்மை பெற்றதாகக் கூறப்படுகிறது. சித்திரை விஷு புண்ணியகாலத்தில் நீராடுவது விசேஷம். மற்றும் கனகதீர்த்தம், பாண தீர்த்தம், பராசரதீர்த்தம் முதலிய தீர்த்தங்களும் உள்ளன.

**தலவிருக்ஷம் :** மருதமரம். இது பிரணவப் பிரகாரத்தின் வடபால் உள்ளது.

**பாடல்கள் :** திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் ஆறும், திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்கள் ஐந்தும், சுந்தரர் அருளிய பதிகம் ஒன்றும் ஆகப் பன்னிரண்டு திருப்பதிகங்களைப் பெற்றுள்ளது இத்தலம்.

" இடைமரு ததனில் ஈண்ட இருந்து
படிமப்பாதம் வைத்த அப்பரிசும் "

என்றும்,

" இடைமருது உறையும் எந்தாய் போற்றி "

என்றும் மாணிக்கவாசகர் இத்தலத்தைக் குறிப்பிடுவதோடு, "எந்தை எந்தாய்" என்ற திருப்பாடலில் 'ஆனந்தத்தேனிருந்த பொந்து' என்று இத்தலத்திறைவனைப் போற்றியுரைத்தருளுகின்றார். மற்றும் " மருவினிய " என்ற பாடலிலும் " மூன்றங்கிலங்கு " என்ற பாடலிலும் இத்தலத்தை மணிவாசகர் குறித்துள்ளார்.

மாணிக்கவாசகருக்கு இத்தலத்திறைவன் திருவடி தீக்ஷை புரிந்தருளினர் என்ற வரலாற்றுச் சிறப்பு இத்திருத்தலத்திற்கு உள்ளது. " குன்றங்கிடையும் " ( பாடல் - 268 ) என்ற திருக்கோவையாரிலும் இத்தலம் குறிப்பிடப்படுகின்றது.

கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப்பாப் பதிகத்தையும் பட்டினத்தார் அருளிய மும்மணிக்கோவையையும், சேக்கிழார் அருளிய பெரியபுராணப் பாடல்களையும், அருணகிரிநாதர் பாடிய திருப்புகழையும் இத்தலம் பெற்றுள்ளது. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பாடிய தலபுராணமும், மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை பாடிய உலாவும் உள்ளன. க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழிலும் இத்தலத்திற்கு ஒரு பாடல் உள்ளது.

**புராணப் பெருமைகள் :** இறைவன் தமது தோழராகிய குபேரனுடன் பல தலங்களுக்கும் சென்று காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தார். குபேரன் அத்தலத்தில் தங்கவிரும்பினுன். இறைவன்

குபேரனைக் காவிரிப்பூம்பட்டினத்தில் பிறக்குமாறு அருள்செய்தார் குபேரன் தன்னைத் தடுத்தாட்கொள்ளுமாறு இறைவனைவேண்டினன் இறைவனும் அதற்கிசைந்து அருள்புரிந்து திருக்கயிலையை அடைந்தார். குபேரன் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் சிவநேசர் என்பவருக்குப் புதல்வனாய்ப் பிறந்து திருவெண்காடர் என்ற பெயருடன் திகழலானார். காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தவராதலின் இவரைப் பட்டினத்தார் என வழங்கினர் பெரியோர்.

திருவெண்காடர் உரிய பருவத்தில் சிவகலை என்ற பெண்ணை மணந்து இல்லறமென்னும் நல்லற வாழ்க்கை நடத்தினார். மக்கட் பேறு இல்லாமையால் மனம் வருந்திய திருவெண்காடர் இறைவனை வேண்டியிருந்தனர்.

திருவெண்காடர் இன்னல் உறுவதைப் போக்க எண்ணிய இடைமருதீசன் வில்வமரத்தடியில் குழந்தையுருவாய்த் தோன்றினார். அவ்வூரில் வாழ்ந்த சிவசாரியராகிய சிவசருமர் அக்குழந்தையை எடுத்துத் தம்மனைவிபால் கொடுத்தார். அக்குழந்தையின் மூலம் தங்கள் வறுமையைப் போக்கிக்கொள்ள விரும்பிய சிவசருமர், குழந்தையை எடுத்துக்கொண்டு காவிரிப்பூம்பட்டினம் சென்றார். இறைவன் ஆணைப்படி குழந்தையை விற்றார்.

திருவெண்காடர் எடைக்கு எடை பொன்கொடுத்து அக்குழந்தையை வாங்கி மருதவாணர் என்று பெயர்சூட்டி வளர்த்துவந்தார். மருதவாணர் இளமைக்காலத்தில் பெட்டி ஒன்றைத் திருவெண்காடரிடம் அளித்து மறைந்தார். திருவெண்காடர் அப்பெட்டியைத்திறந்து பார்த்தார். அதில் கடல்கடந்தநாடுகளுக்குச்சென்று பெரும்பொருள் திரட்டிவந்த மருதவாணர் "காதற்ற ஊசியும் வாராதுகாண் நும் கடைவழிக்கே" என்று எழுதிய ஓலையும் காதற்ற ஒரு ஊசியும் இருக்கக்கண்டு துறவுமேற்கொண்டு திருவிடைமருதூரை அடைந்து கீழைக் கோபுரவாயிலில் தங்கினார். பின் வடக்கு நோக்கி யாத்திரை சென்றார். பத்திரகிரியார் என்ற அரசர் இவருக்குச் சீடரானார். இருவரும் மீண்டும் திருவிடைமருதூர் வந்தனர். திருவெண்காடர் கீழைக்கோபுரத்திலும், பத்திரகிரியார் மேலைக்கோபுரத்திலும் இருந்தனர். முடிவில் பட்டினத்தார் அருளால் பத்திரகிரியார் வீடுபேறுற்றார். பட்டினத்தார் "கரும்பு கைக்கும் தலம் அருள்செய்யும் தலம்" என இறைவன் அசரீரியாகக் கூறக்கேட்டு, திருவொற்றியூரை அடைந்து அங்கே சிவச்சோதியில் கலந்தருளினார்.

"பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆரும் துறக்கை அரிது அரிது" என்று பட்டினத்தார் துறவைப் பாராட்டிக் கூறுகிறார் தாயுமானவர்.

**பத்திரகிரியார்:** உஜ்ஜயினிநாட்டின் அரசர் இவர். பட்டினத்தார் வடதிசை யாத்திரையின்போது உஜ்ஜயினிநாட்டில் ஒரு பிள்ளையார் கோயிலில் நிட்டைகூடியிருந்தார். அவ்வேளையில் அரண்மனையில் கொள்ளையிடவந்த கள்வர்கள் பெருமானே! களவில் பெரும்பொருள் எங்கட்குக் கிடைத்தால் உமக்கு முத்தாரம் சாத்துகிறோம் என்று வேண்டிச்சென்றனர். நினைத்தபடி கள்ளர்கட்குப் பெரும்பொருள் கிடைத்தது. அதனால் திரும்பும்போது ஒரு முத்துமாலையை விநாயகர் மேல் வீசியெறிந்துவிட்டுச் சென்றுவிட்டனர்.

முத்துமாலை அங்கு நிட்டையிலிருந்த பட்டினத்தார் கழுத்தில் விழுந்தது. கள்வரைத்தேடியகாவலர்கள் பட்டினத்தாரைச் சந்தேகித்து அரண்மனைக்கு அழைத்துச்சென்றனர். பத்திரகிரியார் பட்டினத்தாரைக் கழுவிலேற்றுமாறு பணித்தார். பட்டினத்தார் கழுமரங்களைச்சென்று பார்த்தார். கழுமரம் பற்றியெரிந்தது. பத்திரகிரியார் பட்டினத்தாரின் அருளாற்றலை உணர்ந்தார். துறவுபூண்டு பட்டினத்தாரின் சீடரானர்.

சிவயோகியால் ஒருவர் நாயுருக்கொண்டு பத்திரகிரியாருடன் வந்தார். பத்திரகிரியார் அந்நாய்க்குச் சோறு அளித்துவந்தார். இருவரும் திருவிடைமருதூர் வந்தனர். இறைவர் அடியார் உருக்கொண்டு பட்டினத்தாரிடம் பிச்சைகேட்டார். பட்டினத்து அடிகள் அடியவரைநோக்கி, கீழைக் கோபுரவாயிலில் ஒரு சமுசாரி இருக்கிறார் கேளும் என்றனுப்பினர்.

இறைவர் பத்திரகிரியாரிடம்சென்று பட்டினத்தார் கூறியதைக் கூறிப் பிச்சைகேட்டார். பத்திரகிரியார் நாயும் திருவோடும் அல்லவா நம்மைச் சமுசாரியாக்கியது என்று கூறி திருவோட்டை நாயின்மீது எறிந்தார். நாய் உயிர்நீங்கிக் காசி மன்னன் மகளாய்ப் பிறந்து பத்திரகிரியாருடன் சிவச்சோதியில் கலந்தது.

**வரகுணன் :** 'பெரிய அன்பின் வரகுணதேவன்' என்று பாராட்டப்பெறும் பாண்டியமன்னன் இவன். அறியாது அந்தணன் ஒருவனைக்கொன்ற கொலைப்பழி அம்மன்னனைப்பற்றியது. பழிநீங்கத் தலயாத்திரையை மேற்கொண்டு இடைமருதூரை அடைந்தான்.

இரண்டாம்கோபுரத்தைக்கடந்து வரகுணன் உள்ளே செல்லும் போது அவனைப் பற்றிநின்ற பிரமஹத்தி நீங்கிற்று. வரகுணன் இறையருளை எண்ணிப் போற்றி இடைமருதீசரை இறைஞ்சினன். இறைவன் வரகுணனை மேலை வாயில் வழியே செல்லுமாறு பணித்துக் கொலைப் பழியைத் தீர்த்தருளினர். மேலைக் கோபுரமும் கொடுமுடிப் பிராகாரமும் வரகுணன் திருப்பணிகளாகும்.

வரகுண பாண்டியன் சிவபக்தியில் சிறந்து விளங்கினான். தவளைகள் நீரில் கத்தும் ஓசையைக்கேட்டு அவை ஹரஹர முழக்கம் செய்வதாக எண்ணி அவைகட்குக் காசும் பொன்னும் தூவினான். வேப்பங்கனிகள் சிவலிங்கம்போல இருத்தலின் அவைகட்கு விமானங் கள் அமைத்தான்.

சோழமன்னன் தன் மகளை வரகுணனுக்கு மணம் முடித்தான். மிக்க சுவையும், மணமும், அழகுமுள்ள பொருள்கள் கடவுளுக்கே உரியதாகல்வேண்டுமென்ற கருத்துடையவன் வரகுணன்; ஆதலின் பேரழகுவாய்ந்த தன் மனைவியை மணம்முடித்த அன்றைப்பொழுதி லேயே இறைவனுக்கு அர்ப்பணம்செய்தான். கோயிலில் அர்த்த யாம பூசையின்போது கருப்பக்கிருகத்தில் மனைவியைவிட்டு வந்து விட்டான். மறுநாள் பூசைசெய்வதற்குக் கோயில் திறக்கும்போது அரசியின் கைமட்டும் சிவலிங்கத்தின்முடியில் காணப்பட்டது. திரு மணத்தின்போது அரசியின்கையைத் தான்பற்றியதால் இறைவன் அவளது கையை ஏற்கவில்லை போலும் என்று வரகுணன் வருந்தி னான். உடனே கைமறைந்தது. இறைவன் வரகுணன்பக்திச்சிறப்பை உலகறியச் செய்து கயிலைக் காட்சியை அம்மன்னனுக்குக் காட்டி யருளினார்.

**உமை தவம் செய்தது :-** அகத்தியர் முனிவர்களோடு இடை மருதை அடைந்து அம்பிகையைவழிபட்டு, இறைவனதுகாட்சியைக் காண அருள்புரியுமாறு வேண்டினார். இறைவி சிவோகம் பாவனையி லிருந்து தவம் செய்தாள். இறைவன் அம்மைக்கு இதய கமலத்தும், அடியவர்களுக்கு வெளிப்படையாகவும் காட்சியளித்தார்.

**தம்மைத்தாம் அருச்சித்தது :** இறைவன் சிவபூசை செய்வதன் சிறப்பை உணர்த்தும்பொருட்டு, தம்மைத்தாமே பூசித்துக்காட்டினர். ஐந்தாம் திருநாட் பெருவிழாவில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது.

**உரோமசர் அருள்பெறல் :** உரோமசமுனிவர் இத்தலத்திற்கு வந்தபோது கனக தீர்த்தத்தில் காகம் திருவடிமுத்தி பெற்றதைக் கண்டு இத்தலத்தின் பெருமையை அறிந்து, விநாயகரையும் மகா லிங்கப்பெருமானையும் வழிபட்டு அருள்பெற்றார். முனிவர் வேண்டு கோட்படி இறைவன் இடைமருதூரில் எக்காலமும் எழுந்தருளி யிருந்து அருள்தர இசைந்தார். இறைவனருளால் வீரசோழன் இவ் வூரைத் திருத்தியும், திருக்கோயிலைக் கட்டுவித்தும் திருப்பணிகள் புரிந்தான். தைப்பூசம் வீரசோழனால் பெருவிழாவாகக் கொண்டாடப் பெற்றது.

**அருள்பெற்றோர் :** இறைவன் இத்தலத்தில் மார்க்கண்டேய முனிவருக்கு உமையொரு கூறராகக் காட்சியளித்துள்ளார். காஞ்சி

மன்னன் சுகீர்த்தி மகாலிங்கப் பெருமானை வழிபட்டு மகப்பேறு பெற்றுள்ளான். காசிபர் இறைவனை இத்தலத்தில் வழிபட்டுள்ளார். வீரசேனன், சித்திரகீர்த்தி என்ற பாண்டியமன்னர்களும், அயோத்தி மன்னன்யுவனுசுவன், மாந்தாதா என்றசோழமன்னன், வசுமன்னன், அம்சத்துவசன் முதலியோரும் வழிபட்டு நல்லருள் பெற்றுள்ளனர். அகத்திய முனிவருக்கு இத்தலத்தில் இறைவன் திருமணக்கோலம் காட்டியருளினர்.

**பிரதக்ஷிணச் சிறப்பு :** திருவிடைமருதூர்க் கோயிலின் வெளிப் பிராகாரத்தை வலம் வருவதற்கு அசுவமேத பிரதக்ஷிணம் என்று கூறுவர். இதனை வலம்வருவோர் பெறும் நன்மைகள் பலவாகும். ஒருமண்டலம் அரைமண்டலம் கால்மண்டலம் என்று வரையறை செய்துகொண்டு வலம்வரலாம். சித்தப்பிரமை பிடித்தவர் இதனை ஒரு மண்டலம் வலம்வந்தால் குணமடைந்துவருவதை இன்றும் நாம் காணலாம்.

**தைப்பூசம் :** வீரசோழ மன்னனுல் இவ்விழா ஏற்படுத்தப் பெற்றதெனத் தலபுராணம் கூறுகிறது. பூம்பாவைத் திருப்பதிகத்தில் சமய விழாக்களில் குறிப்பிடத்தக்க விழாக்களை எடுத்துக் கூறியருளும் திருஞானசம்பந்தர் "தைப்பூசம் காணுதே போதியோ பூம்பாவாய்" என்று கூறும் தொடரால் தைப்பூசவிழா நம்சமய விழாக்களில் சிறந்த விழாவாகக் கருதப்பெற்றதை அறியலாம்.

இத்தலத் தேவாரத் திருப்பதிகங்களில் "வாசம் கமழ் மாமலர்" என்ற தேவாரத்தில் ஞானசம்பந்தரும், "பாசமொன்றிலராய்" என்ற தேவாரத்தில் அப்பரும் இத்தலத்திற்குச் சிறப்பு விழாவாகிய தைப் பூசத் திருவிழாவைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

தேவ தேவ திருவிடை மருத
மாசறு சிறப்பின் வானவர் ஆடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
அயிரா வணத்துறை ஆடும் அப்ப.

என்று கூறுகின்றுர் பட்டினத்தடிகள். தைப்பூசம் தைமாதம் குரு வாரத்தில் வருவது சிறப்புடையது.

**கல்வெட்டுக்கள் :** இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் 149. அவை பராந்தகன் I (கி. பி. 905 - 947) குலோத்துங்கன் III வரையி லுள்ள சோழபரம்பரையினர் காலத்திலும், வரகுணன் சுந்தர பாண்டியன் முதலிய பாண்டியமன்னர்கள் காலத்திலும் வெட்டப் பட்ட கல்வெட்டுக்கள். இவற்ருல் அறியப்படும் சிறந்த நிகழ்ச்சிகள் இத்தலம் உய்யக்கொண்ட சோழவளநாட்டு, திரைமூர் நாட்டுத் திருவிடைமருதூர் எனவழங்கப்படுகிறது. பரகேசரிவர்மனை முதல்

இராஜேந்திரன் மூன்றுமாண்டில் ஏகநாயகன் திருவாசலுக்கு விளக்கு போட ஆடுகள் அளித்தமை அறியப்படுகிறது. இதனால் மகாலிங்க சுவாமிக்கு ஏகநாயகர் என்ற பெயருண்மை அறியப்படும்.

இத்தலத்து எழுந்தருளியுள்ள சோமாஸ்கந்தர் ஆடல்விடங்க தேவர் என்று அழைக்கப்படுகிறார். இத்தேவர் இங்கநாடு பல்லவராயனால் பிரதிஷ்டை செய்விக்கப்பட்டவர், முதல் பராந்தகன் முப்பத்தேழாம் ஆட்சியாண்டில் திருவாதிரை, சதயம், அமாவாசை இந்த நாட்களைக் கொண்டாட மான்யம்விட்டிருக்கிறான். திருவிடைமருதூர் மூலஸ்தானம் தெற்குப் பக்கத்திலுள்ள பூர்ணகணபதி கருப்பக்கிருகத்திற்கு 8 இலைக்காசு கொடுத்தான் இதனால் மூலஸ்தானக் கணபதி பூர்ணகணபதி என வழங்கப்பட்டமை அறியலாம். தைப்பூச விழாவைப்பற்றிச் சில கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. மகாலிங்க சுவாமிக்குச் செண்பகப்பூ நித்தியம் சாத்திவருவதற்காகத் திருவெண்காடு பிச்சனால் நிபந்தம் அளிக்கப்பட்டது. சோழன் இராஜகேசரி வர்மன் காலத்தில் (கி. பி. 985 - 1113) 10-ம் ஆண்டில் 278-ம் நாளில் அரசி பஞ்சவன்மாதேவியாரால் உமாசகிதருடைய தங்கவுருவம் அமைக்கப்பட்டது. திருக்காமக்கோட்டமுடைய நாச்சியாருக்கு இராஜகேசரிவர்மன் ஒன்பதாமாண்டில் (கி. பி. 994) நம்பிராட்டியார் பஞ்சமாதேவியாரால் ஒன்பது கழஞ்சு பொன் அளிக்கப்பட்டது.

பல கல்வெட்டுக்களால் திருமஞ்சனம் கொண்டுவர மண்குடங்கள் அளிக்கப்பட்டமை அறியப்படுகின்றது. இதனால் அபிஷேகத்திற்கு மண் குடங்களினாலேயே தீர்த்தம் கொண்டு வந்தமை அறியலாம். விக்கிரமசோழன் 5-ம் ஆண்டில் மாணிக்கக்கூத்தர் கோயில் குறிக்கப்படுகிறது. இது நடராஜர் கோயிலோ இல்லையோ என்பது அறியக்கூடவில்லை. சோழர்கள்காலத்துச் சமயாசாரியரிடம் உள்ள அன்பைவிளக்கும் அறிகுறியாக அமைந்த அடையாளங்கள் பல. அவற்றுள் ஜெயங்கொண்ட சோழவளநாட்டின் திருவழுந்தூர் நாட்டின் விக்கிரமசோழன் ஆறலூரிலுள்ளவாணதிராயன் என்பவன் ஆளுடைய பிள்ளையார் படிவத்தை அமைக்கப் பணங்கொடுத்தான்.

மேலும் ஆளுடையபிள்ளையார், ஆளுடையநம்பி இவர்களுடைய படிவத்திற்காக நிவேதிக்க வரியில்லாத நிலத்தை உய்யக்கொண்டான் வளநாட்டில் இருமரபுந்தூய பெருமாள் சதுர்வேதி மங்கலத்தில் அளித்தான். விக்கிரமபாண்டியன் சாந்திவிழா என்ற ஒன்று விக்கிரம பாண்டியன் காலத்தில் கொண்டாடப்பட்டதாக அறிவிக்கிறது. சிறப்பில் சிறப்பாக நாலாவது பிராகாரத்திலுள்ள மூகாம்பிகைபிடாரி, யோகிருந்த பரமேஸ்வரி என வழங்கப்படுகிறார். ஏனைய கல்வெட்டுக்கள் விளக்கீட்டுக்காக அரசனும் அரசியும் நிலமும், பொன்னும், ஆடும் அளித்தமை அறிவிப்பன.

# திருமந்திரமும், சிவஞான சித்தியாரும்

'சித்தாந்தப் புலவர் மணி'

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.

( மலர் 38, இதழ் 3 பக்கம் 134 - இன் தொடர்ச்சி )

**(6) கருட தியானம் :**

கருட தியானத்தில் வல்லவர்கள், உலகில் பாம்பு கடியுண்டவர்க்கு, பாம்பின் விடத்தைப்போக்கி, நலம்புரிதல் காண்கின்றோம். ஆதிபௌதிக கருடன், ஆதிதைவிக கருடன், ஆதியான்மிக கருடன் எனக் கருடன் மூன்று வகைப்படும். இவற்றுள் உலகத்திற் காணப்படுவது ஆதிபௌதிக கருடன். அதற்கு அதிதெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்தில் அதுபோலப் பாவனைசெய்து தியானித்துக் கணிக்கப்படும் மந்திரம், ஆதிதைவிக கருடன். அம்மந்திரத்தின் இடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி, ஆதியான்மிக கருடன். மாந்திரிகன் தன் உள்ளத்தில் மந்திர ரூபமாகிய ஆதிதைவிக கருடனை நாள்தோறும் பாவனைசெய்து பழகி, அப்பயிற்சியின் ஆற்றலால், அம் மந்திர ரூபமே தானாக அநந்நிய பாவனை செய்து, தன் அறிவு அதன் வயமாகும்படி உறைத்து நிற்பான். அந்நிலையில் மந்திர சித்தி கைவரப்பெற்ற மாந்திரிகன், மந்திர வலிமை கொண்ட தனது கண்கொண்டு நோக்கினாலும், பாம்பு கடியுண்டோருக்கு அப்பாம்பின் கடுவிடம் தணிந்து நீங்கும், அதுபோல ஒருவன் 'சிவோயம்' எனத் தன்னுள்ளே பாவித்து, 'சிவதத்துவமசி' (சிவம் நீ ஆகின்றாய்) என்னும் சித்தாந்த மகா வாக்கியப் பொருளை நாடோறும் பயின்று, சிவோகம் (சிவம் நான்) எனப் பாவிப்பானாயின், அந்தப் பாவகத்தின் விளங்கும் முதல்வனால் தனது மலமாயா கன்மங்கள் நீங்கப்பெறுவன். இவ்வுயரிய உண்மையினைச் சிவஞான சித்தியார் (9. 3: 1) **"கருட தியானத்தால் விடம் ஒழியும்: அதுபோலச் சிவோகம் எனப் பாவிக்க, விண்டகலும் மலங்கள் எலாம்; விமலதையும் அடையும்"** என்று தெளிவுறுத்துகின்றது. இக் கருத்தும் திருமூலர் பெருமானால் திருமந்திரத்தில் பின்வருமாறு அருளிச்செய்யப்பெற்றிருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவின் உருவம் குறித்தஅப் போதே
திரிமலம் தீர்ந்து சிவனவன் ஆமே.

## (7) இருவினையொப்பு :

இருவினையொப்பு என்பது, சஞ்சிதமாய் ஈட்டப்பட்டுக் கிடந்த நல்வினை, தீவினைகள் இரண்டும், பக்குவ முறையாற் பயனாக வரும் வழி, பரிவேள்விப் புண்ணியமும் பிரமக்கொலைப் பாவமும் தம்முள் ஒன்றான் ஒன்று சுந்தோபசுந்த நியாயமாய்த் தம்முள் அடிபட்டு ஒத்துக் கெட்டொழிதல் என்று சிலரும்; சஞ்சிதமாய்ச் சேர்ந்துகிடந்த புண்ணியங்களும் பாவங்களும் மிகுதி குறைவின்றிச் சரிநிகர் சமானமாய்த் தம்முள் ஒத்துநிற்றல் என்று சிலரும் கூறுவர். ஒன்றில் விருப்பும் மற்றொன்றில் வெறுப்பும் இன்றிப் புண்ணியம் பாவம் இரண்டிலும், அவற்றின் பயன்களிலும் ஒப்ப உவர்ப்பு நிகழ்ந்து விடுபவனது அறிவின்கண், அவ்விரு வினையும் ஒப்ப நிகழ்தலே இருவினையொப்பு எனப்படும். போற்றினும் தூற்றினும் செத்தினும் போழினும் செஞ்சாந்து பூசினும், நெஞ்சோர்ந்து ஓடா நிலைமையாகிய இவ்விரு வினையொப்பு நிலை நிகழ்ந்தவழி, மலம் தனது வலிமை தேய்வதற்குரிய துணைக்காரணங்கள் எல்லாவற்றோடும் கூடுதலே, மலபரிபாகம் ஆகும். மலபரிபாகமே, உயிர்கள்பால் இறைவனின் திருவருள் பதிதல் ஆகிய சத்திநிபாதம் நிகழ்வதற்குக் காரணம் ஆகும். அந்நிலையில் மலத்திற்குத் துணையாய் நின்று நடாத்திவந்த திரோதான மறைப்பாற்றல், பராசக்தியாகிய அருளாற்றலாக மாறி நலம் புரியும்.

> இருவினைச் செயல்கள் ஒப்பில், ஈசன்றன் சத்திதோயக்,
> குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி, முன்னைத்
> திரிமலம் அறுத்துப், பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்
> பெருகி நாயகன்றன் பாதம் பெறுவது சுத்தம் ஆமே.

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள் (4. 3: 9), இக்கருத்துக்களைத் தெரிவிக்கின்றன. இவற்றைப் பின்வரும் திருமந்திரச் செய்யுள் சுட்டுதல் காணலாம்.

> இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி
> குருவென வந்து குணம்பல நீக்கித்
> தரும்எனும் ஞானத்தால் தன்செயல் அற்றால்
> திரிமலம் தீர்ந்து சிவனவ னாமே.

## (8) ஐவகை அவத்தைகள் :

உயிரானது உடலின்கண் பலவகைக் கருவிகளோடு கூடிநின்று, முறையே சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐவகை அவத்தைகளை அடைந்து வரும். இவற்றை முறையே **நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம்** எனவும் வழங்குவர்.

இவை முறையே புருவநடு - கழுத்து - நெஞ்சு - கொப்பூழ் - மூலம் என்னும் இடங்களில் நிகழும். சாத்திரத்தில், பொறிகள் 10, புலன்கள் 10, பிராணன் அபானன் முதலிய வளிகள் 10, அகக் கருவிகள் 4, புருடதத்துவம் 1. ஆக 35 கருவிகள் தொழிற்படும். கனவு நிலையில் இவற்றுள் பொறிகள் 10 நீங்கலாக ஏனைய 25 கருவிகள் தொழிற்படும். உறக்க நிலையில் பிராணன் சித்தம் புருடன் என்னும் 3 கருவிகளும், பேருறக்கத்தில் பிராணன் புருடன் என்னும் 2 கருவிகளும், உயிர்ப்படக்கத்தில் புருடன் ஆகிய கருவி ஒன்றும் தொழிற்படும்.

சாக்கிரம் முப்பத் தைந்து நுதலினில்; கனவு தன்னில்
ஆக்கிய இருபத் தைந்து களத்தினில்; சுழுனை மூன்று
நீக்கிய இதயம் தன்னில்; துரியத்தில் இரண்டு நாபி;
நோக்கிய துரியா தீதம் நுவலின்மூ லத்தில் ஒன்றே.

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள், அரிய இந்த அனுபவச் செய்திகளைக் கூறுகின்றது. இச்செய்யுளுக்கு மூலமும் மேற்கோளு மாகப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளங்குதல் காணலாம்.

ஐயைந்து பத்துடன் ஆனது சாக்கிரம்
கைகண்ட ஐயைந்திற் கண்டம் கனாஎன்பர்;
பொய்கண்ட மூவர் புருடன் சுழுனையில்
மெய்கண் டவன்உந்தி மேவல் இருவரே.

## (9) சிவானுபவத் திறம் :

இறைவனுடைய திருவருள் அனுபவத்தைப் பக்குவமில்லாதவர்கள் அறியவோ நுகரவோ இயலாது. பக்குவமுடையவராய்ச் சிறப்புமிக்க தக்கவர்களும்கூட, இறையருள் இன்ப அநுபவத்தை அறியவும் நுகரவும் இயலுமேயன்றி, அதனைப் பிறருக்கு எடுத்துரைத்தல் இயலாது. ஆதல்பற்றியே அதனை "பேசா அநுபூதி" என்பர். மணிவாசகரும் "சொல்லுவது அறியேன் வாழி" என்றார். இத்தகைய சொல்லிறந்தஇன்பமாகிய சிவாநுபவத்திறத்தினைச்சிவஞானசித்தியார் **"கன்னிகை தான் காமரசம் காணாள் : மருவி இருவரும் புணர வந்த இன்பம் வாயினாற் பேசரிது; மணந்தவர்தாம் உணர்வர்"** எனக் குறிப்பிடுகின்றது. இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் பின்வருமாறு கூறுகின்றது திருமந்திரம்.

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே ?

**(10) சிவாயநம எனும் குளிகை :**

உயிர் செம்பு போன்றது. உயிரைப் பற்றியுள்ள ஆணவ மலம், செம்பைப்பற்றி நிற்கும் களிம்பு போன்றது. மலத்தால் பிணிப்புண்ட உயிர் களிம்பு கலந்த செம்புபோல்வதாகும். செம்பில் களிம்பு நீங்கினுல், பொன்னுக மாறும். அப்போது அது செம்பொன்னேடு சேர்தல் இயலும். மலநீக்கம் பெற்று வீடு பெற்று இன்பம் எய்தி நிற்கும் முக்தர்கள், **செம்பொன்** போல்வர். சிவபெருமான் செம்பினின்று களிம்பை நீக்கும் **இரதகுளிகை** போல்வன். இரதகுளிகை செம்பொன் ஆகாது; செம்பொன் இரதகுளிகை ஆகாது. அதுபோல இறைவன் உயிர் ஆகான்; உயிர்கள் இறைவன் ஆகமாட்டா. செம்பு களிம்பு நீங்கிச் செம்பொன் ஆனுலும், தன்னைச் செம்பொன்னுக்கிய இரத குளிகைக்குச் சமமாகாது. அதுபோல மலப் பிணிப்புண்ட உயிர்களாகிய பெத்தான்மாக்கள், மலநீக்கம்பெற்றுத்தூய்மையுற்று முத்தான்மாக்கள் ஆயினும், தம்மை மலநீக்கம் பெறச்செய்த முழுமுதற் பெரும் பொருளாகிய சிவபெருமானுக்கு ஒருபோதும் சமம் ஆகமாட்டா. ஆதலின் மலநீக்கம் எய்தி முத்திபெற்ற உயிர்கள் சிவபெருமானைப் போல ஐந்தொழில் இயற்றும் திறம் இன்றி, சிவபிரானின் திருவருள் இன்பத்தை அனுபவிப்பதற்கு மட்டுமே உரிமையுடையனவாகும்.

"செம்பு இரதகுளிகையினுல் களிம்பு அற்றுப் பொன்னுய்ச்
செம்பொனுடன் சேரும் ; மலம் சிதைந்தால் சீவன்
நம்பனுடன் கூடும் எனில், பொன்போல் அல்லன்;
நற்குளிகைபோல, அரன் நணுகும் மலம்போக்கி,
அம்பொன் அடிக்கீழ் வைப்பன்; அருங்களங்கம் அறுக்கும்
அக்குளிகை தானும் பொன் ஆகாதாகும்;
உம்பர்பிரான் உற்பத்தி ஆதிகளுக்கு உரியன்;
உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே"

என்பது சிவஞான சித்தியார் செய்யுள். இதன்கண் உயிர்களின் மலத்தைப் போக்கும் சிவபெருமானைச் செம்பின் களிம்பைப்போக்கும் இரதகுளிகையாகக் குறிப்பிட்டிருத்தல் காணலாம். பின்வரும் திருமந்திரப்பாடல் சிவபெருமானுக்கு உரிய திருவைந்தெழுத்தை இரதகுளிகையாகக் கூறியிருத்தல், ஒப்புநோக்கி மகிழத்தக்கதாகும்.

எளிய வாதுசெய் வார்எங்கள் ஈசனை
ஒளியை உன்னி உருகும் மனத்தராய்த்
தெளிய ஓதிச் சிவாய நமஎன்னும்
குளிகை யிட்டுப்பொன் ஆக்குவன் கூட்டையே,

**(11) மூவகை நிலைகள் :**

உயிர்கள் கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று நிலைகளைப் பொருந்தும். **கேவலமாவது**, இச்சை ஞானம் கிரியை என்னும்

ஆற்றல்கள் சிறிதும் தொழிற்படாமல், உயிர்கள் ஆணவமலத்துடன் கூடிநிற்றல். **சகலமாவது**, ஆணவமலத்தோடு கூடிநின்ற உயிர்கள், பின்பு இறைவனுல் தனு கரண புவன போகங்கள் கூட்டப்பெற்று இச்சை ஞானக்கிரியைகள் ஒருசிறிது விளங்கி நிற்றல். **சுத்தமாவது** தனு கரண புவன போகங்களுடன் கூடிநின்ற உயிர்கள், ஆணவம் முதலிய மலங்கள் நீங்கிப் பிறவியொழிந்து, சிவத்துடன்கூடி, இச்சை ஞானக் கிரியைகள் எங்குமாய்ப் பரவி நிற்றல். இம்மூன்றனையும் காரண அவத்தைகள் என்பர்.

இவற்றுள், காரண கேவல அவத்தை நிலையில் உயிர்கள் உடம்பின்றியும், கலை முதலிய தத்துவங்களோடு கூடி அறிதலின்றியும், முத்தியின் குணமாகிய தருமம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியம் அதர்மம் அஞ்ஞானம் அவைராக்கியம் அனைசுவரியம் ஆகிய எட்டுமின்றியும், இச்சை அறிவு செயல்கள் இல்லாமலும், தமக்கென ஓர் உரிமையில்லாமலும், போகநுகர்ச்சியில் விருப்பமில்லாமலும், உடலின் தோற்றக்கேடுகள் இல்லாமலும், ஓரிடத்திற்குரியவாகாமலும், ஆணவ மலத்துடன் விரவி வியாபித்துநிற்கும். இதன் இயல்பினை,

அறிவிலன் 1, அமூர்த்தன் 2, நித்தன் 3,
அராகாதி குணங்க ளோடும்
செறிவிலன் 4, கலாதி யோடும்
சேர்விலன் ,5 செயல்கள் இல்லான் 6,
குறியிலன் 7, கருத்தா அல்லன் 8,
போகத்திற் கொள்கை யில்லான் 9,
பிறிவிலன், மலத்தி னேடும்
வியாபி 10, கேவலத்தில் ஆன்மா.

என்று சிவஞான சித்தியார் விளக்குகின்றது. இங்ஙனம் கேவல நிலையில் உயிர்களுக்கு உரியனவாகிய இப்பத்துவகை இயல்புகளையும், சிவஞான சித்தியார் கூறுமாறு போலவே, பின்வரும் திருமந்திரப் பாடலும் குறிப்பிடுதல், ஒப்புநோக்கி மகிழ்தற்குரியது.

அறிவின் றமூர்த்தன் அராகாதி சேரான்
குறியொன் றிலாநித்தன் கூடான் கலாதி
செறியும் செயல்இலான் தினங்கற்ற வல்லோன்
கிறியன் மலவியாபி கேவலம் தானே.

**(12) சிவஞானியர் கொடைப்பயன் :**

உயிர்கள் வீடுபேறு எய்துதற்குரிய நெறிகள் பலப்பல. அவைகள் சரியை கிரியை யோகம் ஞானம் என்பனவும், கன்மவேள்வி தவவேள்வி செபவேள்வி தியானவேள்வி ஞானவேள்வி என்பனவும்,

தானம் யாகம் தீர்த்தம் ஆச்சிரமம் தவம் சாந்தி விரதம் கன்மயோகம் என்பனவும், பிறவுமாம். இவைகளுள். சிவஞானிகளுக்குச்செய்யும் தானமும் ஒன்ருகும். இறையருட்பேறு எய்துவதற்கு நாம் விதி நெறியிலும் பக்தி நெறியிலும் முயலலாம். அங்ஙனம் பக்தி நெறியில் நின்று சிவஞானியர்க்கு நாம் திலம் (எள்) அளவு தானம்செய்தாலும், அதன் பயன் நிலமும் மலையும்போல் மிகப்பெரியதாக வளர்ந்தோங்கி, நம்மைப் பிறவிக்கடலினின்று எடுத்து, பரபோகம் துய்ப்பித்துப் பாசத்தை அறுக்கும்; தவமாரும் பிறப்பொன்றில் சாரப்பண்ணும்; நவமாகும் தத்துவஞானத்தைநல்கும்; நம்மை எளிதில் நாதன் அடிக் கமலங்கள் நணுகுவிக்கும். இதனை,

சிவஞானச் செயலுடையோர் கையில் தானம்
திலம்அளவே செய்திடினும், நிலமலைபோல் திகழ்ந்து
பவமாயக் கடலின் அழுந் தாதவகை எடுத்துப்
பரபோகம் துய்ப்பித்துப் பாசத்தை அறுக்கும்
தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச்
சரியைகிரி யாயோகந் தன்னினுஞ்சா ராமே
நவமாகுந் தத்துவஞா னத்தை நல்கி
நாதனடிக் கமலங்க ணணுகுவிக்குந் தானே.

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள் சிறப்புறத் தெளிவுறுத்து கின்றது. இக்கருத்தினை வலியுறுத்தி அறிவுறுத்தும் முறையில், பின் வரும் திருமந்திரச் செய்யுள் பெரிதும் அழகுற விளக்குன்றது.

திலமத் தனையே சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்;
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமற் றேபர போகமுங் குன்றுமே.

**முடிவுரை :**

"தண்டமிழின்மேலாந் தரம்" என்று போற்றத் தக்க நிலையில் சிறந்து விளங்கும் **திருமந்திரம், சிவஞானசித்தியார்** என்னும் இரு பெருநூல்களிலும், இங்ஙனம் எத்தனையோ பற்பல ஒப்புமைத்தன்மை மிக்க செய்யுட்கள் பற்பல, அழகுற அமைந்து காணப்படுகின்றன. அவைகளையெல்லாம் நுனித்தாய்ந்து நோக்கி நுண்ணிதின் எண்ணி யுணர்தல், அறிஞர்களுக்கு ஆராப் பெருவிருந்தாகும். இத்தகைய ஒப்புயர்வற்ற தெய்விகத் தமிழ்ப் பெருநூல்களை, நாம் அனைவரும் கற்றுணர்ந்து பயன் கொண்டு உய்ய முற்படுவோமாக.

# அறம் கூறும் அரிய நூல்கள்

பேராசிரியர் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ.

**அறிமுகம் :**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று திரிகடுகம். இந்நூலை இயற்றிய புலவர் நல்லாதனுர் என்பவர் ஆவர். இவர் பாடிய கடவுள் வாழ்த்துப்பாடலாகிய, "கண்ணகன் ஞாலம் அளந்ததூஉம்" என்று தொடங்கும் பாடல் கொண்டு இவர் வைணவராய் இருப்பார் என்று அறிய முடிகிறது.

சுக்கு, திப்பிலி, மிளகு எனும் மூன்றும் உடல்நோயைமாற்றி இன்பம் பயப்பது போல ஒவ்வொரு பாட்டின்கண் அமைந்த மூன்று மூன்று பொருள்களும் உளநோயாகிய அறியாமையை நீக்கி இன்பம் பயக்கும் என்பதனுல் இந்நூலுக்கு, 'திரிகடுகம்' எனும் பெயர்வந்தது. இவ்விளக்கத்தினை இந்நூலின்கண் உள்ள,

" அருந்ததிக் கற்பினுர் தோளும் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும் — சொல்லின்
அரில் அகற்றும் கேள்வியார் நட்பும்இம் மூன்றும்
திரிகடுகம் போலும் மருந்து."

என்னும் பாடலின் பொருளே விளக்கி நிற்றல் கண்டு மகிழலாம்.

இந்நூலின்கண் 101 பாடல்கள் உள்ளன. ஒவ்வொன்றும் வெண்பா யாப்பிலேயே அமைந்துள்ளன.

**அரிய சில உவமைகள் :**

உலகில் ஒவ்வொருவரும் பிறரை வெல்லக் கருதுதல் இயல்பே. அதற்குப் பலவழிகளைக் கையாளுகின்றனர். ஒரு சிலர் பிறரை வெகுண்டு பேசுவதனுலேயே அவரை வென்று விடலாம் என்று கருதுகின்றனர். இது தவறு என்றும், கிட்டாத பொருள்மீது ஆசை வைப்பதும், ஒருவனின் கல்விச்சிறப்பை ஆராயாது குற்றம் கூறுவதும் தவறு என்றும் ஆசிரியர் ஒரு பாடலில் கூறுகின்றுர். இச் செயல்கள் எது போன்றவை என்றுல் உமியைக் குத்திப் பயன்பெற்றுவிடலாம் என்று கருதும் தன்மையது என்று கூறுகின்றுர். அப்பாடல்:

" வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கு நோன்பிலியும்
இல்லது காமுற்று இருப்பானும் — கல்வி
செவிக்குற்றம் பார்த்திருப் பானும் இம்மூவர்
உமிக்குத்திக் கைவருந்து வார். [பா. எ. 28]

அலைகின்ற கடலைப் போன்ற தடுமாற்றத்துடன் கூடிய இடைவிடா அச்சமும், மீண்டும் மீண்டும் விட்டுநீங்கமுடியாத வேட்கையும், உண்மையுணராமல் உண்டாகும் சினமும் தவறு என்று கூறுகின்றார். இச் செயல்கள் நம்மை நாமே அழித்துக் கொள்ள வழி வகுப்பன என்கிறார். தம்மிடத்துப்பிறந்த நெய்யிலேயே தாம்பொரிந்து வேவது போல (ஆடு), நம்மிடத்துப் பிறந்த இவையாலேயே நாம் அழிந்து போவோம் என்று விளக்குகின்றார். அப்பாடல்:

" அச்சம் அலைகடலின் தோன்றலும் ஆர்வுற்ற
விட்டகல கில்லாத வேட்கையும் — கட்டிய
மெய்ந்நிலை காணு வெகுளியும் இம்மூன்றும்
தம்நெய்யில் தாம்பொரியு மாறு. [பா. எ. 65]

**முப்பொழுது :**

ஒரு பாடலில், நாம் செய்ய வேண்டிய செயல்களைக் கூறவரும் பொழுது ஒருநாள்செயல்களாகக் காலை பகல் இரவு எனும் மூன்று பொழுதும் எங்ஙனம் கழிய வேண்டும் என்று விளக்கிக் கூறுகின்றார்.

விருந்தினர்கள் இல்லாமல் நாம்மட்டும் உண்ட பகற்பொழுதும், நல்ல மனைவியில்லாத இரவுப் பொழுதும், வறியவர்களுக்கு ஒன்று கொடுத்தல் இல்லாத காலைப் பொழுதும் அறிவுடையோர்க்கு மிகுந்த நோய் செய்வன என்று கூறுகின்றார். அப்பாடல்:

" விருந்தின்றி யுண்ட பகலும் திருந்திழையார்
புல்லப் புடைபெயராக் கங்குலும்—இல்லார்க்கு ஒன்(று)
ஈயாது ஒழிந்தகன்ற காலையும் இம்மூன்றும்
நோயே யுரனுடை யார்க்கு." [பா. எ. 44]

**மழையருக்கும் கோளும், மழையளிக்கும் சால்பும் :**

திரிகடுகம் எனும் நூலின் ஆசிரியர் ஒரு பாடலில் இவ்வுலகில் மழையானது காலம் தவருமல் - குறையாமல் பெய்யவேண்டியிருக்க அது பெய்தலைக் குறைக்கும் கோள்களாகச் சிலர் வாழ்கின்றார்கள் என்று அவர்களை இனங்காட்டி விளக்குகின்றார்.

தான் கொள்ளுதற்குரிய பொருளை விரும்பிக் குடிமக்களைவருத்தும் வேந்தனும், உண்மை நிகழ்ச்சிகளைக் கூருத பொய் மனிதரும், ஒருவனுக்கு மனையாளாக இருந்து அவனுடைய சொல், வீடு எனும்

இரண்டின் எல்லை கடந்து நடப்பாளும் என்ற இம்மூவர் விரைந்து மழை பெய்தலைக் குறைக்கும் கோள்கள் என்று கூறுகின்றார். அப் பாடல்:

" கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந்து எல்லை கடப்பாளும் இம்மூவர்
வல்லே மழையருக்கும் கோள். [பா. எ. 50]

இந்நூலாசிரியர் இன்னொரு பாடலில் மழைபெய்யாத நேரத்திலும், "மழையே நீ பெய்" என்று ஆணையிட்டால் மழை பெய்யும் அளவு ஆற்றலுடையவர்கள் சிலர் இவ்வுலகில் இருக்கின்றனர் என்று அவர்களையும் நமக்கு இனங்காட்டுகின்றார்.

கொண்ட கணவனின் குறிப்பறிந்து நடக்கும் மனைவியும், தான் மேற்கொண்ட விரதங்களை, செய்யும் முறைப்படி செய்யும் தவசியும், தீங்கினை நீக்கிவிட்டு நல்லனவற்றைக் குடிமக்களுக்குச் செய்துவாழும் அரசனும் ஆகிய இம்மூவரும் பெய் என்று சொல்ல மழை பொழியும் என்கின்றார்.

" கொழுநனைத் தொழுது எழும் பெண் பெய் என்றால் மழை பொழியும் " என்னும் வள்ளுவர் கருத்தும் ஈண்டு நினைவுகூரத்தக்கது.

ஆசிரியர் கூறும் இம்மூவரின் ஏவல்வழி, ஐம்பூதங்களும் நிற்கும் என்று நாம் அறிய முடிகின்றது. அப்பாடல்:

" கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் தவசி கொடிதொரீஇ
நல்லவை செய்வான் அரசன் இம்மூவர்
பெய்யெனப் பெய்யும் மழை." [பா. எ. 96]

( தொடரும் )

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswamy Devasthanam, Thirubuvanam

I was immensely deligh ed to worship the Narasimha Avathar being cooled l down of his ferotiousness. A rare type of temple. The temple is maintained well.

(S-d) Narasimhan.
Asst Director of Survey and Land Records
Tanjore.

# ஒரு கடமை காமத்தை வெல்கிறது!

புலவர். திரு. கா. ம. கண்ணப்பன்

**மின்மினி கண்ணீர் வடிக்கிறது!**

அவள் பேரழகி! நல்லநிறம். எடுப்பான தோற்றம்; பருவத்திற்கேற்ற வளர்ச்சி; சீரான உடற்கட்டு.

பெயர் சுகன்னியா.

அரசன் பெற்ற மகள்; அன்னையர் பலருக்கும் அருமை மகள் அவள் ஒருத்திதான்! சரியாதி அரசனின் செல்வமகள் அந்தக் குறும்புக்காரி. "சுகன்னியா! இன்று நாமெல்லோரும் வனத்திற்குச் செல்கிறோம்; உன் தோழிகளோடு நீயும் ஆயத்தமாக இரு'' — சரியாதி சோலைவளம் காண ஆயத்தமானான்; பத்தினிகளோடும், மகளோடும், பரிவாரங்களோடும் புறப்பட்டான்.

புன்னையும் தேவதாருவும் செடி கொடிகளும் அடர்ந்து படர்ந்து விளங்கியதால் பாதியிருளும் இலேசான ஒளியுமாக விளங்கியது அந்த வனம்.

சுகன்னியா வனத்தைக் கண்டவுடனேயே மனத்தைப் பறிகொடுத்தாள்; ஓடி ஆடி விளையாடினாள்; தோழிகளோடு குதூகலத்துடன் வனத்தைச் சுற்றிச்சுற்றி வந்தாள்.

தோழி! அதோ பார்; எவ்வளவு அழகான புற்று. அதன்மேலே செடி கொடிகள்! பார்க்கவே மனம் பரவசமாகிறது! அருகில் சென்று காண்போம் வா'' — சுகன்யா தன் தோழிகளோடு அந்தப் புற்றருகே சென்றாள்; அருகே சென்றதும் புற்றின் துளையில் மின்மினிப் பூச்சிகள் போல எவையோ இரண்டு, உள்ளே ஒளி வீசுவதைக் கண்டாள்.

"கண்ணைப்பறிக்கும் இந்த ஒளி வேடிக்கையாக இருக்கிறதே என்று எண்ணியவாறு அருகில் கிடந்த கூர்மையான முள் ஒன்றை எடுத்து, துளைகளின் ஊடே ஒளிவீசும் அந்தப் பொருளை அழுத்திக் குத்திப் பார்த்தாள்.

"பெண்ணே! எட்டி நில்! குத்தாதே! புற்றைச் சிதைக்காமல் ஒதுங்கிப்போ''

சுகன்யா திடுக்கிட்டாள்; 'எங்கிருந்து கேட்கிறது இந்தக் குரல்! கிணற்றிலே இருந்து பேசுவதுபோல் கேட்கிறதே!' புற்றின் துளையை மீண்டும் பார்த்தாள் சுகன்யா!

மின்மினி கண்ணீர் வடித்தது! சிவந்தது!

முள்ளால் குத்தப்பட்டது மின்மினி அன்று; அது முனிவரின் கண்! காற்றைச் சுவாசிப்பதையும் ஒழித்தவர் அவர்! விகற்பமே இல்லாதவர். எப்போதும் பராசக்தியைத் தியானித்தபடி இருப்பவர் அவர்; புற்று மூடிக்கிடக்குமளவு எல்லாவற்றையும் ஒழித்துத் தவம் செய்பவர் அவர்; அந்தப் பார்க்கவ முனிவரின் கண்கள்தாம் முள்ளால் குத்தப்பட்டன.

துன்பம் தாங்காமல் துடிதுடித்துப் போனார் பார்க்கவ முனிவர்; உயிர்த்துன்பம் நீக்கத் தவம் செய்யும் முனிவர் உடல்துன்பத்தால் - கண்கள் தரும் துன்பத்தால் - பெரிதும் அவதிப்பட்டார்.

சுகன்யா அஞ்சினாள்! தனக்கு ஏதேனும் நேர்ந்து விடுமோ என்று எண்ணி வருந்தினாள்; அஞ்சியவாறே அரண்மனையை அடைந்தாள்!

விளையாட்டுப்பெண் இப்படியா வினையைத் தேடிக்கொள்ளவேண்டும்!

**ஒரு உள்ளம் இரண்டு உதடுகளைப் பேசவைக்கிறது!**

பார்க்கவ முனிவர் துன்பம் தாங்க மாட்டாது வருந்திய அதே நேரத்தில் அரண்மனையில் எல்லாரும் சொல்லிக்கொள்ள முடியாத துன்பத்தால் தத்தளித்தார்கள்; யாரிடமும் சுறுசுறுப்பு இல்லை! எதையோ பறிகொடுத்தவர்கள்போல் இருந்தார்கள். நாட்டுமக்கள் கூட இதே நிலையில்தான் இருந்தார்கள்.

உடலிலிருந்து கழிவுப் பொருள்கள் வெளியாகா விட்டால் எப்படி நலமாக இருக்க முடியும்? மக்களுக்கும் அரசனுக்கும் ஏற்பட்ட பெருந் துன்பம் இதுதான்!

அரசன் 'இந்தத் துன்பம் ஏன் வந்தது; என்ன செய்வது' என்று பலவாறு சிந்தித்தான். "ஏதோ பாவம் நிகழ்ந்திருக்க வேண்டும்" - அவன் சிந்தனை பளிச்சென்று பதில் சொல்லிற்று படித்த மாணவனைப் போல.

அரசன் மந்திரிகளையும் ஆலோசகர்களையும் அழைத்து இதனைப்பற்றி முடிவு செய்வது என்று தீர்மானம் செய்துகொண்டான். எல்லாரையும் அழைப்பித்தான். "உங்களில் யார் யார் என்னென்ன பாவம் செய்தீர்கள்? பாவத்தின் தண்டனை நம்மைப் பரிதவிக்கச்செய்து கொண்டிருக்கிறது; ஒருவரும் மறைக்காமல் உண்மையைச் சொல்லுங்கள்" என்று கேட்டுக்கொண்டான்.

'அரசே, நம்தடாகத்துக்கு அருகில் இருக்கும் வனத்தில் ஒரு முனிவர் தேவியைத் தியானித்தபடி பெருந்தவம் செய்கிருர்; அவர்மேல் புற்று மூடிக்கிடக்கிறது ; செடிகொடிகளால் புற்று பின்னப்பட்டிருக்கிறது ; அவர் தீயைப் போன்று ஒளிவீசும் கண்களை உடையவர்; யாரோ அவருக்குத் தீங்கு செய்திருக்க வேண்டும்' – அங்கே கூடியிருந்தவருள் ஒருவர் இப்படிச் சொன்னுர்.

அரசன் மருண்டான்; மனம் தளர்ந்தான்; அங்கே இருந்த பலரையும் 'இந்தக் குற்றத்தை யாரேனும் செய்தீர்களா ?' என்று விசாரித்தான்.

தந்தை படும் துன்பம், மக்கள் படும் துயரம், அமைச்சர் முதலியோர் படும் வேதனை எல்லாம் சேர்ந்து விஸ்வரூபம் எடுத்து, சுகன்னியாவின் உள்ளத்தை அச்சுறுத்தியது. 'தான் செய்த தவறு எல்லாரையும் பாதிக்கிறதே' என்று வருந்தினுள் அவள்.

"உண்மையைச் சொல்லிவிட வேண்டும்" — உள்ளம் துடித்தது அவளுக்கு; அந்த உள்ளம் உதடுகளைப் பேசவைக்கிறது. தந்தையே! நந்தவனத்தில் நான்தான்...மின்மினி என நினைத்து...முனிவருக்குத் துன்பம் விளைவித்தேன்" — சுகன்னியா மென்று விழுங்கினுள்.

பாவம், பக்கத்திலேயே இருப்பதை அறிந்த அரசன் பதறிப்போனுன். குறும்புக்காரி குற்றவாளியாகிருள்; நடந்ததை எல்லாம் வாக்குமூலம் கொடுக்கிருள்.

ஒருதந்தை வாயடைத்துப் போகின்ருர் !

அரசன் முனிவர் தவம் செய்யும் வனத்தை நோக்கிக் கிளம்பினுன்; அமைச்சர்களும் பின்தொடர்ந்தனர்.

செடிகொடிகளை அகற்றிப் புற்றை நீக்கினுன்; அருந்தவ முனிவரைக் கண்டான்; அவரது அகன்று சிவந்த விழிகள் அவன் உள்ளத்தை ஆணியால் தைப்பதுபோல இருந்தன; முனிவரின் திருவடிகளில் விழுந்தான்;

தன் அருமைமகள், அறியாமையால் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டினுன்.

மகள் செய்த பிழை காரணமாகத் தனக்கும் மக்களுக்கும் உண்டாகியுள்ள துன்பத்தை முனிவரிடம் எடுத்துரைத்தான் ; முனிவர் சாபமிட்டிருப்பார் என்று கருதி விமோசனம் தரவேண்டினுன்.

" அரசனே ; நாம் யாருக்கும் சாபமிடவில்லை; மக்களும் நீயும் துன்பப்படவேண்டும் என்ற எண்ணமும் எமக்கு இல்லை; தேவிபக்தனுக்குத் துன்பம் செய்கின்றவர் எவருடைய சாபமும் இல்லாமலே துன்பம் அடைவர் " — முனிவர் இவ்வாறு கூறினுர்.

அரசன் துயரமே வடிவாய்ச் செய்வது அறியாமல் பணிவோடு எதிரே நின்ருன்.

முனிவர் தொடர்ந்து கூறினர்.

"உன்மகள் செய்த பிழையால் கண்கெட்ட நிலையில் — அந்தகனுய் இருக்கின்ருேம்; கண்கள் இருந்தும் ஆற்றல் அற்றவனுய் இருக்கிற எனக்கு யார் உதவி செய்வார்கள்; பணிவிடை செய்வார்கள் ?"

சரியாதி ஆமோதித்தான்; தனக்கு ஒருபெரு வாய்ப்புக் கிட்டியிருப் பதை உணர்ந்தான்.

"முனிபுங்கவரே! தாங்கள் இதற்காக வருந்த வேண்டா; நான் நல்ல பணியாட்களை உமக்குப் பணிவிடை செய்ய அனுப்பி வைக்கிறேன்"

"கூலிப் பணியாட்கள் வேலை செய்வார்கள் என்பதை அறிவோம்; அன்பு இல்லாத அத்தகைய பணியாட்கள் எத்தனைபேர் இருந்தால் என்ன?" — முனிவர் அழுத்தமாகச் சொன்ஞர்.

"அப்படியானுல் அன்பு நிறைந்த பணியாள் ஒருவர் போதும் என்கிறீகளா ?

"இல்லை! பணியாட்கள் உண்மையான அன்பைக் காட்டுவதில்லை; என்கிருேம்"

அரசன் தன் அனுபவத்தை ஒருகணம் ஒப்பிட்டுக் கொண்டான்.

"நீ உண்மையிலேயே எனக்கு நல்ல மகிழ்ச்சியை உண்டாக்கும் எண்ணம் உடையவனுனல்... உன்மகளை — சுகன்னியாவை எனக் குக் கொடுத்துவிடு"

அரசன் எதிர்பார்க்கவில்லை இந்தப் பதிலை; அதிர்ந்து போனுன் !

"நீ உன்மகளை எனக்குத் தானம் செய்தால் அவளுக்கு ஒருகுறையும் உண்டாகாமல் பார்த்துக் கொள்வேன்" — முனிவர் உறுதிமொழியும் கொடுத்தார்.

அரசன் வாயடைத்துப் போனுன்; பெரிய பொறுப்பு தனக்கு இருப் பதை எண்ணியவாறு பதிலொன்றும் சொல்லாமல் விடைபெற்று, அரண்மனையை அடைந்தான்.

**கடமை கற்போடு கலக்கிறது!**

'சுகன்னியா இளமையும் அழகும் உடையவள்; முனிவரோ வயது பல கடந்தவர்! சுகன்னியா ஆசாபாசங்களுக்கு உட்பட்டவள்; முனிவரோ அவைகளை அடக்கி ஆள்பவர்! இவள் காமசுகம் பெறத் தகுதியுடையவள்; அவர் அதனைக் கடந்தவர்'—

சரியாதி ஒவ்வொன்றையும் சரியாகச் சிந்தித்தான்; கௌதமரை மணந்த அகலிகைவாழ்க்கை அவன் கண்முன் நிழலாடியது.

ஒன்றுமே விளங்காத நிலையில் மந்திரிகளையும் பெரியோர்களையும் அழைத்து ஆலோசனை செய்தான்; விளைவு குழப்பம்தான் !

தந்தையின் எண்ணத்தை அறிந்தாள் சுகன்னியா; தந்தையின் மனம் காமத்திற்கும் கற்புக்கும் இடையே கிடந்து தத்தளிப்பதை அறிந்து வியப்பெய்தினாள்; அவள் கடமைக்கு முதலிடம்தர நினைத்த கன்னி !

"என்னால்தானே அரசருக்குத்துன்பம்! மக்களுக்கு அவதி! அந்த அருந்தவ முனிவர் அந்தகர் ஆனார்! என்னால் கண்ணிழந்த அவரை நான் கணவராக அடைவேன் ; நான்செய்த தவறுகளுக்குப் பரிகாரம் காண்பதுதான் என் கடமை"

—முடிவு அவள் மனத்தில் தத்துவ அலையாகத் தவழ்ந்து வந்தது. நேரே அரசன்முன் வந்தாள். சற்றும் தயங்காமல் தன் தியாகத் தத்துவத்தைக் கடமைச் சொற்களால் வடித்துக்கொட்டினாள் !

அரசன் கலக்கமுற்றான்; தங்க விக்ரகத்திற்கு வைரப்பந்தல்போட்டது போல இருந்தது அவள் கருத்து ! ஆனாலும் அரசன். தந்தையாயிற்றே !

"சுகன்னியா ! தவறு செய்து விட்டோமே என்று தன்னையே தரத் துணிந்து விட்டாய்; உன் அழகு, இளமை முதலியவற்றை அனுபவிக்கும் ஆற்றல் இல்லாத அவரிடம் உன்னை அளிப்பதைக்காட்டிலும் நாங்கள் பாவத்தை அனுபவிப்பதே மேல்" – அரசன் விரக்தியோடு கூறினான்.

"தந்தையே! நீங்கள் எனக்காக இவ்வளவு வருந்த வேண்டா; நான் துணிவோடு இருக்கிறேன் ! உயிர்கள் செய்ததை அனுபவித்தே ஆகவேண்டும்."

அரசன் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

"வெறும் உடல் இச்சைக்காக என்னை அழித்துக்கொள்ள நான் தயாராக இல்லை; காமசுகத்தைக் காட்டிலும் கற்புடையவள், கடமை உணர்வுடையவள் என்று போற்றுமாறு வாழ்வதில் பெரிய சுகத்தைக் காண்பேன்."

அவள் இன்னும் பேசினாள் !

"உடல் இச்சையால் வரும் சுகம் சிலநேரமே இருக்கக் கூடியது. கற்புச் சுகமும் கடமைச் சுகமும் காலமெல்லாம் அழியாதன !"

"இளம்வயதில் இத்தனை அறிவாற்றலா ?"–அரசன் திணறிப்போனான். மகள் சுகன்னியாவின் உயர்ந்த எண்ணங்கள் அவனைக் குலுக்கியது. சுகன்னியா முனிவருக்குப் பத்தினியானாள் ! மக்களும் அரசனும் பாவத்துன்பம் நீங்கினர் ! கற்பு மணம் வீசுகிறது !

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் அவர்கள் மாத ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் வழிபாடு 11-2-79 ஞாயிற்றுக்கிழமை பகல் 12-மணி அளவில் திருநாகேச்சரம் அருள் மிகு நாகநாதர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைக ளுடன் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டின்போது திருபுவனம் தேவஸ்தானம் திருமுறைப்பணியாளர் திரு. S. தண்டபாணி தேசிகர் அவர்களால் திருநாகேச்சரத் தலத்திருப்பதிகப் பாராயணம் செய்யப் பெற்றது தலப்பதிகங்கள் அடங்கிய நூல் வெளியிட்டு வழங்கப் பெற்றது வழிபாட்டில் திருநாகேச்சரம் சேக்கிழார் வார வழிபாட்டுக் கழகத்தினர் கலந்துகொண்டு வழிபட்டுப் பயன் பெற்றனர்.

காலை 10-மணி அளவில் சமய விரிவுரை நடைபெற்றது. தருமை யாதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வரும் தருமையாதீனப் புலவருமான வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. அவர்கள் திரு முறைகள் என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ. அவர்கள் "இறைவழிபாடு" என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர். அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

சென்னை தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில்,

## நாயன்மார் குருபூஜை

கலிக்கம்ப நாயனர், கண்ணப்ப நாயனர், அரிவாட்டாயநாயனர், எறிபத்த நாயனர், காரி நாயனர், கோச்செங்கட் சோழ நாயனர் இவர்கள் குருபூஜைகள் முறையே 2—2—79, 7—2—79, 8—2—79 16—2—79, 23—2—79, 26—2—79 தேதிகளில் நிலைய பூஜை மடத்தில் நடைபெற்றது. திரு. V. N. ஆறுமுக முதலியார் அவர்கள் பெரிய புராணம் படித்து விளக்கவுரையாற்றினர்கள். ஸ்ரீ அப்பர் குரு குலமாணவர்களும் நிலைய அன்பர்களும் கேட்டுப் பயனடைந்தனர். எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

# மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

இம்மாதத்திய சமயப் பிரசார வழிபாடு 25—2—79ல ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணிமுதல் பகல் 1-00 மணிவரை செங்கை மாவட்டம் ஆழ்வார் திருநகர் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. மூர்த்திகளுக்கெல்லாம் விசேஷ அபிஷக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. மயிலை திரு. கபாலி ஓதுவாரும் காஞ்சி திரு. வரத ஓதுவாரும் திருமுறைப் பாராயணம் செய்தனர்.

வழிபாட்டிற்குப் பிறகு சமயப்பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. கோயில் நிர்வாகக்குழு செயலாளர், நிலைய அன்பர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில், "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றுசொல்வார்கள். ஆதலின் இந்தப் பகுதியில் எல்லோரும் ஒன்ருகச் சேர்ந்து வீட்டிற்கு ரூ 2—00. வீதம் வசூல் செய்து ரூபாய் மூன்று லட்சம் செலவில் கோயில்கட்டினேம், சென்றமாதம் கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தது. மண்டலாபிஷேகம் நடக்கும் சமயத்தில் தருமையாதீனப் பிரசார நிலையக் குழுவினர்கள் வழிபாடு செய்ய வந்திருப்பது எல்லோருக்கும் உற்சாகத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது; ஆதீனச்சார்பில் ஒவ்வொரு கோயிலுக்கும் சென்று வழிபாடுசெய்யும்போதுதான் அங்குள்ள பக்தர்களுக்குப்பக்தி ஏற்படும்; நாங்கள் எவ்வளவு செய்தாலும் சிறப்பாக இருக்காது என்று குறிப்பிட்டார்கள்.

திரு. R. சிவஞானம் செட்டியார் முன்னுரைக்குப் பிறகு, திரு. திரு. C. செல்வ நடராஜ முதலியார், தருமை யாதீனத்தில் செய்கிற தொண்டுகள் — மாத வழிபாடும், கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழாவும் மிகவும் போற்றக்கூடியன; இந்த மாத வழிபாடு கும்பாபிஷேகம் முடிந்தவுடன் இங்கு வைத்திருப்பது எல்லோருக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்கிறது; கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ள முடியாத அன்பர்கள் இம்மாத வழிபாட்டில் கலந்துகொண்டு தரிசனம் செய்து சந்தோஷப்படுகிருர்கள்; இங்குள்ள அருள்மிகு சிந்தாமணி விநாயகர் எல்லாச் சித்திகளையும் தரக்கூடியவர்; சிந்தாமணி விநாயகர் என்ற பெயர் தமிழ்நாட்டில் அதிகம் இல்லையென்று கூறி, சில விநாயகர் பாடல்களுக்கு விளக்கங்கூறி அறங்காவலருக்கு நன்றியும் வாழ்த்துங்கூறி முடித்தார்.

கோயில் நிர்வாகஸ்தர் திரு. பன்னீர் செல்வம் பேசுகையில் இந்தக் கோயில் அஸ்திவாரமே தருமை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் உத்தரவுப்படி நிலையசுவாமிகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது; பிறகு கோயிலினுடைய ஒவ்வொருநிகழ்ச்சிக்கும்

நிலைய சுவாமிகள் வந்து ஆரம்பித்து வைத்தார்கள்; நடந்த கும்பாபிஷேகத்திற்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகளும் நிலைய சுவாமிகளும் வந்து கலந்துகொண்டு நடத்தினார்கள்; மண்டலாபிஷேகம் நடக்கும் இந்நேரத்தில் பிரசார நிலைய அன்பர்கள் மாதவழிபாடு செய்வது எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது; எப்படி வழிபாடு செய்யவேண்டுமென்று செய்து காட்டினார்கள் என்று கூறி ஆதீனத்திற்கும் நிலையத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

இவ்விழா 6-2-79உ செவ்வாய்க்கிழமை மாலை 7-மணிக்கு நிலைய மன்றத்தில் நடைபெற்றது. விழாவிற்கு மத்திய அரசு ஓய்வு பெற்ற துணைக்காரியதரிசி திரு. G. வெங்கடசுப்பிரமணியம், M. A., B. L., அவர்கள் தலைமை வகித்தார்கள். ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசாமி படத்துக்கு அர்ச்சனை செய்தபிறகு காஞ்சி திரு. C. வரத ஓதுவாரும், திரு. N. இராமமூர்த்தி அய்யர், குமரி R. கௌரி ஆகியோரும் வேலூர் திருப்பதிகங்களையும் முருகன் நாமாவளிகளையும் பாடினார்கள்.

விழாத்தலைவர் உரையாற்றுகையில், 'நான் 25 வருஷங்களுக்கு மேல் டில்லியில் இருந்தேன்; எனது குருநாதர் வள்ளிமலைசுவாமி சபை ஏற்படுத்தி ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையன்றும் திருப்புகழ் பாடி வந்தார்கள்; பதினைந்து தினங்களுக்கு முன்புதான் ஓய்வுபெற்றுச் சென்னைக்கு வந்தேன்; வந்தவுடன் முருகனுக்கு உகந்தநாளான இந்தச் செவ்வாய்க்கிழமையில் நடைபெறும் இந்த விழாவில் கலந்து கொண்டேன்; முருக பஜனையை முதன்முதலாகச் சென்னையில் இங்கு ஆரம்பம் செய்ய வாய்ப்புக் கிடைத்தது முருகன் கருணையினாலேயே என்று சொல்லி, சில பஜனைப்பாடல்களைத் தம் துணைவியாருடன் சேர்ந்துபாடி அனைவரையும் மகிழ்வித்தார்கள்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswamy Devasthanam, Thirubuvanam

This temple is kept very neat and clean. The atmosphere is very congenial for worship. The sculpture is very attractive and good.

(Sd.) N. Palaniappan

16—8—78 District Judlge Tanjore.

# எதிர்காலம்

## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**காளயுக்திஸு பங்குனிமீ 1உ முதல் 30உ முடிய.**

**( 15—3—79 முதல் 13—4—79 முடிய )**

ஸ்ரீ காளயுக்தி ஸு மாசிமீ 30உ புதவாரம் உத்திர நக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 36 நாழிகை 38 விஞடிக்குத் துலா லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் கும்பராசியிலிருந்து மீனராசி சங்கிரமணமாகச் சௌரமான பங்குனிமாதப் பிரவேசம் செய்கின்ருர். அன்று ஷடசீதி புண்யகால மாகும். மறுதினம் குருவாரம் முதல்தேதியாகும். பங்குனிமீ 15உ குருவாரம் (சுக்கிலபட்சம்) சைத்திர சுத்த பிரதமை சாந்திரமான வருஷம் ஆரம்பமாகிறது. சாந்திரமான வருஷாதிபலன் குருபகவான் கோள்களின் மண்டலத்தில் கலியுகாப்தம் 5080 சௌரமானசித் தார்த்தி வருஷத்திற்கு இராஜாவாகிருர். சங்கிரமகால கிரகஸ்திதியின் பலனுவது லோகத்தில் மேன்மக்கள் ஸ்வதர்மத்தில் நின்று நற்காரி யங்கள் செய்வார்கள். தேசங்களில் ஜனுதிபதிகள் அரசர்கள் நீதியை அறிந்து நல்ல வழியில் பிரஜைகளைச் செலுத்துவர். பிரஜைகளுக்கு உணவுப்பொருள்கள் மிகுதியாகவும் மலிவாகவும் கிடைக்கப்பெற்று மன நிறைவுடன் கிரியைகள் பலபுரிந்துவருவார்கள்.

உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரியபீடங்களில் சிவப்பிர காசமாகத் திகழ்கின்ற சிவஞான குருமகான்கள் லோகத்திற்குச் சிவாசார நல்வழி போதித்து ஆசியருளி வருவதினின்று லோக மக்கள் சிவாசார நியமங்களில் உயர்வடைவார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் உற்சவங்கள், நித்தியம் ஆறு கால பூசைகள் சீரிய முறையில் நடைபெற்று வரும். சகலமான பிரஜைகளும் சிவபரம் பொருளை உணர்ந்து நன்மார்க்கத்தில் சிறந்து வாழ்வார்கள்.

**1. மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼**

**( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )**

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத் தரும். தனுதி சௌகரியங்கள் மேலாக இருந்துவரும். சகோதரருக்கு 10உ

அளவில் ஓர் நன்மை ஏற்படும். வித்துவத்துவத்தில் சிறப்பினை யளிக்கும். இயந்திர வாகனங்களில் விருத்தி நிலைமையை ஏற்படுத்தி வரும். அரசாங்க அவசரகாரியங்களிலும் பிதா நலனிலும் அவசிய செலவுகள் இருந்துகொண்டிருக்கும். தாரம் புத்திரர்கள் இவர்களுக்கு சரீர நலிவு தோற்றினும் உடன் குணமாகும். பங்குனிமீ 4உ 37 நாழிகை 26 வினுடிமுதல் 6உ 49 நாழிகை 26 வினுடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

**2, ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$**

( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் நற்பலன் அளித்துவரும். பண வருமானங்கள் மதிப்புடன் வந்துகொண்டிருக்கும். சகோதரர் சகோதரிகளுக்கு மேன்மைஸ்திதி ஏற்படும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் முன்னேற்றம் ஏற்படும். தயக்கமாக இருந்த எல்லாக் காரியங்களிலும் 14உ அளவில் துரிதநிலைமையாகும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். பங்குனிமீ 6உ 49 நாழிகை 26 வினுடிமுதல் 8உ 57 நாழிகை 21 வினுடி வரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை – புனர்பூசம் $\frac{3}{4}$**

( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் கௌரவத்துக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். 14உ அளவில் சகோதரருக்கு உயர்பதவியும் இராசாங்கசௌரவமும் ஏற்படும். பிதாவிற்குத் தேகவுபாதை நீங்கி நலம்தரும். பூர்வீக சொத்தில் நற்பலன் வந்துசேரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். பங்குனிமீ 8உ 57 நாழிகை 21 வினுடிமுதல் 11உ 3 நாழிகை 21 வினுடிவரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

**4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.**

( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் ஏற்படுகிற செலவினங்களுக்கு ஏற்பப்பணவருமானங்கள் வந்துசேரும். சகோதரர்நலம் நன்ருக இருந்துவரும். வித்தியாவியா பாராதி கலைத்துறைகளில் பிரசித்தநிலைமையை ஏற்படுத்தும். வீடு வாகனங்களின் பிராப்தியில் 14உ அளவில் ஆக்கத்தினை ஏற்படுத்தும். சாஸ்திரக்கேள்வி நூலாராய்ச்சியில் மனம் செல்லும். பங்குனிமீ

11உ 3 நாழிகை 21 விநாடி முதல் 13உ 9 நாழிகை 48 விநாடிவரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼**

( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே. )

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடந்துவரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானத்தில் நிறைவை ஏற்படுத்திவரும் சகோதரர் அல்லது சகோதரி வழியினரில் ஓர் மனவருத்தசம்பவம் வந்து நீங்கும். வீடு வாகனாதிகளின் சௌகரியம் மேலாக இருந்துவரும். பூர்வசொத்து பிராப்தியில் சிக்கலுக்கிடையே நற்பலனாகவே வந்து சேரும். ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கு அருச்சனைசெய்ய நன்மையை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். பங்குனிமீ 13உ 9 நாழிகை 48 விநாடி முதல் 15உ 18 நாழிகை 41 விநாடி வரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

**6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½**

( டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் சுமார்பலனாகநடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் திருப்தியாக வந்துகொண்டிருக்கும். சகோதரர் சகோதரிகளுக்குச்சுபம்தரும். மாதப்பின்பகுதியில் ஜீவனோபாயத்தில் சர்ச்சைகள்வந்து உடன் புத்திசாதுரியத்தால் சமாளித்தல் ஆகும். புத்திரன் கல்வி கலை தொழில்துறைகளில் உயர்வைத்தரும். மனைவிக்குச் சிரோபாதைபோன்ற வெப்பநலிவு தோன்றி உடன்குணமாகும். பங்குனிமீ 15உ 18 நாழிகை 41 விநாடி முதல் 17உ 32 நாழிகை 19 விநாடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾**

( ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் நற்பலன்தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானத்தில் நல்லநிலையை ஏற்படுத்திவரும். சகோதரருக்கு மாதப்பின்பகுதியில் அரசாங்க வெகுமதிகளைத் தரும். வீடுவாகனங்களில் சௌகரியங்கள் மேலிடும். ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கு அருச்சனைசெய்ய அஜீர்ணம்போன்றநலிவுகள்நீங்கி ஆரோக்கியம் ஏற்படும். வழக்குகளில் ஜெயம்தரும். தாரபுத்திரர்களின்நலம் நன்றாக இருந்துவரும். பங்குனிமீ 17உ 32 நாழிகை 15 விநாடி முதல் 19உ 51 நாழிகை 51 விநாடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.
(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுமார்பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனவருமானங்கள் திருப்திகரமாக வரவாகும். சகோதரர் அல்லது சகோதரிக்கு சுபம் ஏற்படும். அடிக்கடி வெளியில் அலேச்சல் இருந்துவரும். புத்திரனுக்கு நரம்பு பலவீனம் ஏற்பட்டுக் குணமாகும். மனைவியின் நலம் சாதாரணமாக இருந்துவரும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனைசெய்வதால் சோரர் அக்கினிபயம்நீங்கி நன்மைஏற்படும். பங்குனிமீ 19உ 51 நாழிகை 51 விஞடி முதல் 22உ 17 நாழிகை 11 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$
(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களுக்கும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்களை ஏற்படுத்திக்கொண்டிக்கும். சகோதரருக்கு அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். மாதாவின் உடல் நலம் பாதித்து உடன் குணமாகும். ஒப்பந்த விஷயங்களில் ஓர் குழப்பம் ஏற்பட்டுச் சரிபடும். எல்லாக் காரியங்களும் மனோதைரியத் தினுல்நடைபெற்றுவரும் தாரபுத்திரர்களுக்குச் சௌக்கியபலன் தரும். பங்குனிமீ 22உ 17 நாழிகை 11 விஞடிமுதல் 24உ 46 நாழிகை 4 விஞடிவரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$
(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு நலம் பல ஏற்படும். இரத்தின பூஷணங்களை அளிக்கும். 14உக்கு மேல் பூமி இயந்திரங்களின் பிராப்தியை ஏற்படுத்தும். தாரசௌக்கியம் புத்திரசௌக்கியம் நன்ருகஇருந்துவரும். விவகாரத்தில் சாதகநிலைமை யாகும். பங்குனிமீ 24உ 41 நாழிகை 41 விஞடி முதல் 27உ 14 நாழிகை 39 விஞடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$
(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனவரவு செலவுகள் சரி சமனுக இருந்துவரும். சகோ

தரருக்கு உஷ்ணுதிக்க நலிவு தோற்றி உடன் குணமாகும். வீடு வாகனுதிகளில் செலவாக இருப்பினும் சௌகரியம் மிகும். டாம்பீகம் அல்லது கௌரவத்திற்குச செலவை ஏற்கநேரும். தாரபுத்திரர்களின் நலம் சாதாரணமாக இருந்துவரும். பங்குனிமீ 27உ 14 நாழிகை 39 விஞடிமுதல் 29உ 38 நாழிகை 54 விஞடிவரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

**12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி.**

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். வித்துவத்துவத்தில் ஞானபார்க்க சிந்தனை அல்லது அறிவியல்துறை ஆராய்ச்சி மிகும். வாகன பிராப்தியில் முதலீடு ஆகும். புத்திரர் புத்திரிகளுக்கு நலம் பல ஏற்படும். தேகம் உஷ்ணுதிக்கம் மிகுந்து காணும். மனைவிக்கு மாதப்பின்பகுதியில் சில விஷ அரிப்பு வந்து குணமாகும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய நலம்தரும். பங்குனிமீ 3, 4, 30உகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.


## ஸ்ரீ குமரகுருபரர்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் முதல்வருமான ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளின் திருப்பெயர் கொண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளியநடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சிக்கட்டுரைகளுடன் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் மாத இதழாக வெளிவருகிறது.

| | | | |
|---|---|---|---|
| ஆயுட் சந்தா | (உள்நாடு) | ரூ. | 100 — 00 |
| | (வெளிநாடு) | ரூ. | 125 — 00 |
| ஆண்டுச்சந்தா | (உள்நாடு) | ரூ. | 7 — 50 |
| | (ஸ்ரீலங்கா) | ரூ. | 10 — 00 |
| | (வெளிநாடு) | ரூ. | 12 — 00 |

நிர்வாக ஆசிரியர்: "ஸ்ரீ குமரகுருபரர்"
ஸ்ரீ காசிமடம் : திருப்பனந்தாள்.
தஞ்சை மாவட்டம். 612 504.

# பங்குனிமாதச் சிறப்பு நாட்கள்

15—3—79 வியாழன், வேளூர் சந்திரசேகரர் உற்சவ ஆரம்பம்.

18—3—79 ஞாயிறு, தருமை 21ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

19—3—79 திங்கள், சீகாழி ஸ்ரீபிரம்மபுரீசுவரசுவாமி சம்வத்சராபிஷேகம்.

21—3—79 புதன், காளாஷ்டமி.

25—3—79 ஞாயிறு, மகாபிரதோஷம்.

26—3—79 திங்கள், மாதசிவராத்திரி, தண்டியடிகள்நாயனுர் குருபூஜை.

27—3—79 செவ்வாய், சர்வ அமாவாசை.

28—3—79 புதன், வசந்த நவராத்திரி ஆரம்பம்.

29—3—79 வியாழன், தெலுங்கு வருடப்பிறப்பு. யுகாதி பண்டிகை.

30—3—79 வெள்ளி, திருக்கடவூர் மார்க்கண்டேயர் அசுவதிதீர்த்தம்.

31—3—79 சனி, கிருத்திகை விரதம், தருமை தருமபுரீஸ்வரர் ஆலய சண்முகருக்குக் கிருத்திகை அபிஷேகம்.

1—4—79 ஞாயிறு, வேளூர்க்கிருத்திகை, சந்திரசேகரர் உற்சவபூர்த்தி. வேளூர், திருபுவனம், திருவாரூர், பேரளம், உய்யக்கொண்டான்திருமலை முதலிய இடங்களில் பங்குனிஉத்திரஉற்சவ ஆரம்பம், நேசநாயனுர் குருபூஜை.

2—4—79 திங்கள், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி சம்வத்சராபிஷேகம்.

3—4—79 செவ்வாய், தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீஸ்வரர் சம்வத்சராபிஷேகம்.

4—4—79 புதன், திருவையாறு அந்தணபுரத்தில் திருநந்திதேவர் ஜனனம் [திருவாதிரை] இரவு பட்டாபிஷேகம், கணநாத நாயனுர் குருபூஜை.

5—4—79 வியாழன், திருக்கற்குடி ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி சம்வத்சராபிஷேகம். வசந்த நவராத்திரி பூர்த்தி, ஸ்ரீராமநவமி, திருவையாறு, திருமழபாடியில் திருநந்திகேஸ்வரருக்குத் திருக்கல்யாணம் [புனர்வசு நட்சத்திரம்].

6—4—79 வெள்ளி, முனையடுவார் நாயனுர் குருபூஜை.

9—4—79 திங்கள், மகாபிரதோஷம்.

10—4—79 செவ்வாய், பங்குனி உத்திரம், வேளூர், திருவையாறு முதலிய தலங்களில் பங்குனிஉத்திரதீர்த்தம் [நட்சத்திரத்தில்] தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் சித்தார்த்தி வருடத்திய குருபூஜை விழாவின் திருமுகம் ஒப்பமிட்டுப் பூஜையில் வைத்தருளல், திருக்கடவூர் ஸ்ரீமுனீஸ்வரபூஜை.

12—4—79 வியாழன், பௌர்ணமி விரத பூஜை, மாத பூஜையில் தயிர் அபிஷேகம், திருநின்றியூர் ஸ்ரீ லட்சுமிபுரீசுவர சுவாமிக்கும், திருமுல்லைவாசல் ஸ்ரீ முல்லைவனநாத சுவாமிக்கும் சம்வத்சராபிஷேகம்.

13—4—79 வெள்ளி, திருவையாறு வருடப்பிறப்பு தீர்த்தம். காரைக்காலம்மையார் குருபூஜை.

The following particulars regarding the ownership of the GNANASAMBANDAM the Monthly newspaper, are published as called for by Rule 8 of the Registration of News papers (Centra Rules, 1956).

## Form IV

1. Place of publication - DHARMAPURAM
2. Periodicity of its publication - MONTHLY
3. Printer's and Publisher's Name - Sri V. RAMAIAH PILLAI, Manager, Dharmapuram Adhinam Mutt.

   Nationality - INDIAN

   Address - West Street, Dharmapuram Mayuram P. O.
4. Editor's Name - Vidwan Srimath, RAMALINGA THAMBIRAN SWAMIGAL

   Nationality - INDIAN

   Address - Velur Devasthanam, Vaithiswarankoil.
5. Names & addresses of individuals who own the Newspaper, own partnerships or Share holders holding more than one percent of the total Capital - His Holiness Sri-la-Sri SHANMUKA DESIKA GNANASAMBANDA PARAMACHARYA SWAMIGAL Avl., Tharmapuram Adhinam; Dharmapuram. Mayuram (P.O.) Tamil Nadu,

I, V. Ramaiah Pillai hereby declare that the particulars given above are true to the best of my knowledge & belief.

(Sd.) V. RAMAIAH PILLAI,
Publisher.

Dated 24—2—1979.